


கல்முனை NET kalmunainet.com உண்மையின் முகம்
e-Paper
Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

இதழ்: 20 | சுபகிருது வருடம் பங்குனி 17 | 2023 மார்ச் 31 வெள்ளிக்கிழமை | 20 பக்கங்கள் | விலை 70/-

# மட்டக்களப்பு கச்சேரி முற்றுகை: அபி. குழுக் கூட்டத்தில் அமளி துமளி



*(கனகராசா சரவணன் )*

மட்டக்களப்பு ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட களேபரத்தில் பெண்ணொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை இன்று (30) காலை முற்றுகையிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட களேபரத்தில் பெண்ணொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


03




## ஏறாவூர் புன்னைகுடா வீதிக்கு சிங்கள பெயர் சூட்டும் ஆளுநர்

07

## இனப்பிரச்சினையை பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து பிரிக்க முடியாது



இனப்பிரச்சினையை பிரதான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து பிரிக்க முடியாது எனவும், நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாயின் அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'பொருளாதார உரையாடல் - சர்வதேச நாணய நிதியம் மற்றும் அதற்கு அப்பால்' கருத்தரங்கில் முக்கிய உரை ஆற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பசுமைப் பொருளாதாரத்திற்கான இலங்கையின் சாத்தியக்கூறுகள் சிறப்பாக உள்ளதாகவும், நாடு டிஜிட்டல் மயமாக்கலை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார்

## IMF சர்வதேச நாணய நிதியம்

12

## நெருக்கடியின் பின்னணியும் மீட்சியில் IMF இன் பங்கும்



15

## பொடியப்பு பியசேன

## மக்கள் தொண்டில் ஒரு வெற்றிடம்



# ஆடுகளமாக மாறும் மக்கள் பிரதிநிதிகள் சபைகள்



தற்போதைய நிலையில் ஜனாதிபதியும் ஆளும் கட்சியினரும் எந்தவோர் தேர்தலையும் விரும்பவில்லை. இதற்கான மூலகாரணம் தேர்தலில் ஆளும் கட்சியினர் படுதோல்வி அடைவார்கள் என்ற அச்சமே ஆகும்.

இந்த நிலையில், உள்ளூராட்சிசபைகள் கலைக்கப்பட்டமையால், 340 உள்ளூராட்சி சபைகளும் ஆளுனர்களின் அதிகாரப் பிடிக்குள் வந்துள்ளன. ஏற்கனவே 9 மாகாண சபைகளும் ஆளுனர்களின் முழுமையான அதிகாரப்பிடிக்குள் வந்து 5 வருடங்களாக அடங்கிக் கிடக்கின்றன. ஆயின் நாட்டில் தேர்தல்கள் இல்லாத, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சபைகளாக உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள் ஆக்கப்பட்டுள்ளன.

எனவே ஆளுனர்கள் தமது அதிகாரங்களைக் கொண்டு ஜனாதிபதிக்கும், பொதுஜனப் பெரமுனக் கட்சிக்கும் மிகவும் விசுவாசமான அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. இவர்கள் உள்ளூராட்சி சபைகளின் ஆணையாளர்களாக, செயலாளர்களாக இருந்து பணியாற்றப் போகின்றார்கள். குறிப்பாக கிழக்கு மாகாண ஆளுனர் மாகாணசபையில் திருப்தியீனமாக நடந்துகொள்வது போல், உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகள் நியமனத்திலும் நடந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மக்கள் சக்தியே அதிர்ச்சி வைத்தியம் அளிக்க வேண்டும்**

எனவே, தேர்தல் இல்லாத நிலையில் மாகாண சபைகளைப்போல், உள்ளூராட்சிசபைகளும் ஆளும் கட்சியின் அதிகார ஆடுகளமாக மாறப்போகின்றது. ஏற்கனவே, பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள் மூலமாக மக்களுக்கான நிவாரணங்கள், தொழில் சார் உதவிகளில் ஆளும்கட்சி ஆதரவாளர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர். குறிப்பாக, மட்டக்களப்பில் தோணிகள், வலைகள், துவிச்சக்கர வண்டிகள், வீடுகள், ஆடுகள், கோழிக் குஞ்சுகள், நிவாரணங்கள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளன என்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இப்படியான போக்குகள் உள்ளூராட்சி சபைகளிலும் தொற்றிக்கொள்ள வாய்ப்புள்ளது. தேர்தல்கள் இல்லாத, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழல் மேலும் மக்களுக்கு ஆபத்தாக அமைய இ டமளிக்கலாம். ஏற்கனவே கிழக்கு மாகாண ஆளுனர், தமக்கு சார்பான ஆணையாளர் ஒருவரை மட்டக்களப்பு மாநகர சபையில் நியமித்து மாநகர அபிவிருத்திகளை முடக்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

2020 இல் பாராளுமன்றத் தேர்தலில் பூச்சியத் தோல்வியடைந்தவர், ஐக்கிய தேசியக் கட்சியை தலைமையேற்று வழிநடாத்தியவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் ஆவார். அப்படியான ஒருவர்தான் தற்போதைய ஜனாதிபதியாவார். பாராளுமன்றத்தில் மக்கள் வாக்குகள் மூலமாக, மக்கள் இறைமை மூலமாக ஒரு ஆசனத்தைக்கூட பெற முடியாத ஒருவர் அதிஷ்டவசமாக ஜனாதிபதியாகியுள்ளார். இப்படியான ஒருவர் உளவியல் ரீதியாக மக்களையும் தேர்தலையும் கண்டு அஞ்சவே செய்வார். இவர் தனது உச்சமான அதிகாரத்தையும், தந்திரோபாயத்தையும் கொண்டு தேர்தல்களை இயன்றவரை தவிர்க்கவே செய்வார்.

அதனையே அவர் செய்து கொண்டு வருகின்றார். தன்னை நிராகரித்த மக்களைப் பழி தீர்ப்பது போன்று ஜனாதிபதி செயற்படுகின்றார்.

அதேவேளை, தம்மைத் தேர்ந்தெடுத்த பொதுஜனப் பெரமுன அரசாங்கத்தையும் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்கும் நோக்குடன் ஜனாதிபதி செயற்படுவது போல் தெரிகிறது. அதன் அடையாளமாக தேர்தல்கள் தவிர்க்கப்படுகின்றன. தேர்தலைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள் பொலிஸ் இராணுவ பலத்தினால் ஒடுக்கப்படுகின்றனர். அதில் இரு உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

மக்கள் இறைமை அற்ற ஜனாதிபதி மக்கள் போராட்டத்தினால் நிராகரிக்கப்பட்ட பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் பாதுகாவலராக மாறிவிட்டார். மக்களின் பணத்தை ஏப்பமிட்ட, மோசடிகள் செய்த ஆட்சியாளர்களின் பாதுகாப்புக் கவசமாக ஜனாதிபதி மாறியுள்ளார். நாட்டைக்கொள்ளையடிப்பது மட்டுமல்ல குற்றம், கொள்ளையர்களைப் பாதுகாப்பதும் குற்றமாகும் என்பதை ஜனாதிபதி அறிந்துகொள்ள வேண்டும்.

இந்த நிலையில், ஆளும் அதிகாரர்களின் நியமனக்களமாகவும், அரசியல் இலாப நோக்க ஆடுகளமாகவும் சபைகள் மாற இடமுண்டு. மக்களும் எதிர்க்கட்சிகளும் இணைந்தால் இதற்கான பதிலை விரைவாக அளிக்க முடியும். ஜனநாயக விரோத அதிகாரசக்திக்கு மக்கள் சக்தியே அதிர்ச்சியான வைத்தியம் அளிக்க வேண்டும்

பரிமானம் கல்முனை NET Parimanam
பரிமாணம்
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
எல்லை வீதி, கல்முனை 01.
kalmunainet@gmail.com | +94762933026 | +94773457915

# மார்பு தட்டினால் மட்டும் போதாது...

எரிபொருள் விலைகள் அதிரடியாக குறைக்கப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக பஸ் கட்டணங்கள், முச்சக்கர வண்டி கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளதாக சொல்லி இருக்கிறார்கள். கிடுகிடுவென்று கட்டணங்களை உயர்த்தியவர்கள், சாக்குப் போக்குக்காக குறைத்திருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

கடன் வாங்கி கல்யாணம் கட்டுகின்றவனின் நிலையில் இருக்கின்ற இலங்கை, எரிபொருள்களின் விலைகளை குறைத்து இருப்பது என்பதில் ஓரளவு திருப்தி கொள்ள முடிகிறது. என்றாலும் மக்களின் சுமை போக்கும் நடவடிக்கையாக இது தெரியவில்லை.

சர்வதேச நாணய நிதியம் கடன் கொடுத்து விட்டது என்பதற்காக நாட்டில் பிரச்சனை தீர்ந்து விட்டது என்பது அர்த்தமல்ல. இனித்தான் பிரச்சனைகளே புது வடிவம் எடுக்கும் போல் தெரிகிறது.

இது ஒரு புறம் இருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைத்துள்ள நீண்டகாலக் கடன் வசதிகள், ஒரு கயிற்றுப்பிடிதான் என்பதை யாரும் புரிந்து கொண்டதாக தெரியவில்லை.

ஏற்கனவே, வாங்கிய கடனையே செலுத்த முடியாமல், படுகடனில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு, 2. 9 பில்லியன் டொலர்களை கட்டம் கட்டமாக வழங்குவதற்கு, சர்வதேச நாணய நிதியம் முன் வந்திருப்பதில் முடிச்சுகள் இல்லாமல் இல்லை. செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, தருவதாக இணக்கம் காணப்பட்டுள்ள 2. 9 பில்லியனில், எஞ்சியவை இலங்கை நடந்துகொள்ளும் நாணயத்தைப் பொறுத்திருக்கிறது.

சாதாரண வங்கி கொடுக்கல் வாங்கலில், நமது வங்கிகள் நடப்பது போன்ற நிலைப்பாடுதான், இதிலும் பின்பற்றப்பட்டுள்ளது. வீடு கட்டுவதற்கு கடன் கோரினால், கட்டம் கட்டமாக பணத்தை தருவார்களே. அத்திவாரம் போடுவதற்கு ஒரு தொகை; நில மட்டத்துக்கு கட்டுவதற்கு இன்னொரு தொகை; கூரை போடுவதற்கு இறுதித்தொகை. இந்த நடைமுறையில் தான் சர்வதேச நாணய நிதியமும் இலங்கையை அவதானித்துக் கொண்டிருக்கிறது.

இலாபமீட்ட முடியாத அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல், மூலதனச் சந்தையின் பங்குகளை பிடிக்குள் வைத்திருத்தல், இன்னும், வங்கிகளின் வட்டிவீதத்தை ஏற்ற, இறக்கமின்றி பேணுதல், இவை எல்லாவற்றையும் விட, இலங்கையில் தலை விரித்தாடுகின்ற ஊழல் மோசடி முற்றாக இல்லாமல் செய்யப்பட வேண்டும். இவைகள் அரசின் செயற்பாடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரையறைகள். பாரிய அழுத்தங்களோடு விதிக்கப்பட்டிருக்கும் *IMF* இன் நிபந்தனைகள் மீறப்பட்டால், எஞ்சிய தொகை வழங்கப்படாது. இதனை விட வழங்கப்பட்டவற்றுக்கான கால எல்லைகளும் சுருக்கப்படலாம்.

48 மாதங்கள் 24 மாதங்களாகவோ அல்லது இதை விடவும் குறையலாம்.

இத்தனை இறுக்கங்களுடன் பெறப்பட்ட கடனை வரவேற்றுத்தான் வெடிச்சத்தங்கள் காதைப்பிளந்தன. கொண்டு வந்துள்ள கடன் வசதிகளை குறித்த காலத்துக்குள் மீளக் கொடுப் பதற்கான வியூகங்களை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

1 ஆம் பக்க தொடர்ச்சி...

# மட்டக்களப்பு கச்சேரி முற்றுகை:
# அபி. குழுக் கூட்டத்தில் அமளி துமளி




மேலும், அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட அமளி துமளியைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் மற்றும் இரா. சாணக்கியன் எம். பி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் இன்று வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், காலை 9 மணிக்கு



வாகரை பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு, வாகனேரியில் சூரிய மின்சார திட்டத்துக்கு 352 ஏக்கர் வயல் காணியை அபகரிப்பு, மயிலத்தைமடு மேச்சல் தரை காணி அபகரிப்பு போன்ற பல்வேறு காணிகளை அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரிப்பை நிறுத்த கோரி பொதுமக்கள் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து ஒன்று திரண்ட பொது மக்களுடன் இரா. சாணக்கியன் எம். பி மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை நோக்கி ஆர்ப்பாட்ட பேரணியாக சென்ற நிலையில் அவர்களை காரியாலய பகுதிக்கு செல்லவிடாது பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றனர்.



இதன் போது அதனை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் உட் செல்ல முற்பட்டபோது அதனை பொலிஸார் தடுக்க முற்பட்ட நிலையில் பெண் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதனையும் மீறி மாவட்ட செயலக பகுதிக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள் நுழைந்தையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்ட நிலையில், மாவட்ட செயலகத்துக்குள் உள் நுழையும் கோட்டை கதவையும் மூடிய பொலிஸார் உட்செல்ல விடாது தடுத்ததால் கதவின் முன் அமர்ந்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து பாதுகாப்பு கடமைக்கு மேலதிக பொலிஸார் வரவழைத்து பாதுகாப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

கூட்டத்துக்கு வருகை தந்திருந்த இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் இணைந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த சில அதிகாரிகள் மற்றும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் காரியாலயத்துக்கு செல்லவோ காரியாலயத்தில் இருந்து வெளியேற முடியாமல் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில், அரசாங்க அதிபருடன் பொலிஸார் கலந்துரையாடிய நிலையில் கூட்டத்துக்கு செல்வதற்கு இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், இரா. சாணக்கியன் எம். பி மற்றும் அதிகாரிகள் மற்றும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை உட்செல்ல அனுமதித்தனர்.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காணி தொடர்பாக அரசாங்க அதிபரிடம் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் வினவிய போது, காணி குறித்து எங்களுக்கு தொடர்பில்லை அது பிரதேச செயலகங்களிடம் கேட்குமாறு தெரிவித்ததையடுத்து அவர் பல வாதப் பிரதிவாதங்களின் மத்தியில் இங்கு மக்களுக்கு தீர்வு கிடைக்காது என்று தெரிவித்து, கூட்டத்தில் இருந்து இராஜாங்க அமைச்சர் இடை நடுவில் வெளியேறினார்.

இராஜாங்க அமைச்சரும் அபிவிருத்தி குழு தலைவருமான சி. சந்திரகாந்தனிடம் காணி அபகரிப்பு தொடர்பாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வாக்குவாதத்தில் இரா. சாணக்கியன் ஈடுபட்டார்.

அபிவிருத்திகுழு தலைவர், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை அவமதித்து பேசியதுடன், அமளி துமளி ஏற்பட்டதையடுத்து இரா. சாணக்கியன் இடைநடுவில் அங்கிருந்து வெளிநடப்பு செய்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்பகல் 11. 30 மணிக்கு கலைந்து சென்றனர்.

# கச்சதீவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு: படையினர் ஈடுபடுவதாக பொதுமக்கள் தகவல்

யாழ். கச்சதீவிலுள்ள மணல்திட்டுக்களில் இருந்து கடற்படையினர் மணலை அகழ்ந்து கடற்படை படகுகள் மூலம் நெடுந்தீவுக்கு கொண்டுவருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கச்சதீவு மண் திட்டுக்களில் அகழப்படும் மணல் நெடுந்தீவிற்கு கொண்டு வரப்படுவதை தாம் நேரடியாக கண்டதாக அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர்.

நெடுந்தீவில் கடற்படையினர் அதிகளவில் நிலைகொண்டுள்ளமையால் அவர்களின் கடற்படை முகாம் கட்டுமானப் பணிக்காகவே கச்சதீவில் இருந்து மணல் அகழ்ந்து எடுத்து வரப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.



ரணில் விக்ரமசிங்க இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்தே இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் அனைத்தும் ஜனாதிபதிக்கோ அல்லது பிரதமருக்கு தெரியாமலா இடம்பெறுகின்றது எனவும், அல்லது இதற்கு பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் என்போருக்கும் தெரியாமலா இடம்பெறுகின்றது எனவும் மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

எனவே ஜனாதிபதி இந்த விடயத்தினை கவனத்தில் எடுத்து துறைசார் அமைச்சர்களுக்கோ அதிகாரிகளுக்கோ இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த உத்தரவிட வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தல் விடுத்துள்ளனர்

**மார்பு தட்டினால் மட்டும் போதாது... (ஆசிரியர்த் தலைப்பு...)**

ஜனாதிபதி வகுத்துள்ளார் என்பதே அரசாங்க உயர்மட்ட தகவலாக இருக்கிறது.

இதற்கிடையில், அரச நிறுவனங்கள் எதுவும் வணிகச் செயற்பாடுகளில் ஈடுபட அனுமதிக்கப்படாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.


இதன் மறு பொருள், வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடும் அரச நிறுவனங்கள், தனியார் வசம் வரப்போகின்றன என்பதே. விமான சேவைகள், மின்சார சபை, இன்னும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான வினைத்திறன்களில் இல்லை. இவற்றை வெளிநாட்டு நிறுவனங்களின் நிர்வாகத்தில் கொண்டு வந்து, வெளிநாட்டு நாணயங்களின் புழக்கங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளிலேயே அரசு கூடுதல் ஆர்வம் காட்டுகிறது.

இதுவரை காலமும் அனுபவித்த வரப்பிரசாதங்கள்தான், நமது நாட்டை வங்குரோத்துக்குள் இழுத்துச் சென்றதாக பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

'இலங்கையில் ஊழல் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்' என நாணய நிதியம் மிகவும் கடும்தொனியில் அரசுக்கு சொல்லி இருக்கிறது. மிகவும் யதார்த்தமான கருத்து இது. எங்கும், எதிலும், எப்போதும் நமது நாட்டில் மலிந்து கிடப்பது ஊழல்தான்.

நாணயநிதியம் இலங்கைக்கு கடன்வழங்குவதற்காக விதித்த 15 நிபந்தனைகளையும் நிறைவேற்றி இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். மக்களை வருத்தி நிபந்தனைகளை நிறைவேற்றி இருக்கின்ற இந்த அரசு, ஊழல் மோசடியை இல்லாமல் ஒழிப்போம் என்ற உத்தரவாதத்தை மாத்திரமே IMF க்கு வழங்கி இருக்கிறது. புதிய சட்டம் ஒன்றை கொண்டு வந்து இல்லாமல் ஒழிக்கப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். மார்பு தட்டி சொல்வது பெரிய விடயம் அல்ல. இதனை,நடைமுறைப்படுத்திகாட்டினால் தான் நற்பெயருக்கு நாம் சொந்தக்காரராக முடியும்

# பேருவலையில் நில அதிர்வு; பேரச்சத்தில் மக்கள் :
## ரிக்ஸ்டரில் 3.7 பதிவு



இலங்கையின் கரையோர பிரதேசமான பேருவலையில் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் நில அதிர்வு நேற்று (30.03.2023) உணரப்பட்டுள்ளது. நண்பகல் 1.03 அளவில், இந்த அதிர்வு உணரப்பட்டதாக பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

இது ரிக்ஸ்டர் அளவு கோலில் 3.7 ஆக பதிவாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிர்வு சுமார் மூன்று செக்கன்களே நீடித்ததாக அந்தப் பிரதேசத்தில் இருந்து சிலோன் சிறிக்கு ஒருவர் தகவல் தெரிவித்தார்.

''பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. வீட்டு சாமான்கள் குலுங்கிய சத்தம் இந்தப் பிரதேச மக்களை கிலி கொள்ளச் செய்தது''.

பூகற்பவியல் ஆய்வாளர்கள் இந்தப் பிரதேசத்துக்கு சென்று நிலைமைகளை உன்னிப்பாக ஆராய்ந்து வருகிறார்கள்.

## வடக்கு, கிழக்கில் கொதித்தெழும் மக்கள்:

# உணர்வுகளை சீண்டும் தீய சக்திகள்

(குணா )

தமிழ் பேசும் மக்கள் வாழும் பூர்வீகங்களில் மாற்று மத அடையாங்களை நிறுவும் முயற்சிகளும், வரலாற்றுப் பெயர்களை, வேறு பொருள்படும் வகையில் மாற்றும் செயற்பாடுகளும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாரிய எதிர்ப்பலைகளை ஏற்படுத்தி வருகின்றன.

தமிழர்களின் தொன்மங்களை தொல்பொருள் எனும் போர்வைக்குள், திணித்து மத அடையாளங்களை கபளீகரம் செய்யும் வேலைகள் நிறுத்தப்பட வேண்டுமென கண்டங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் தமிழ் அரசியல் தலைமைகளே இவ்வாறான கண்டனங்களை வெளியிட்டுள்ளன. இன்னும் ஓரிரு தினங்களில் இச்செயற்பாடுகளை நிறுத்துவதற்கான உத்தரவாதங்கள் அரச தரப்பிலிருந்து வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் பரந்தளவிலான, எதிர்ப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும் எனவும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

**தெற்கில் இனவாத அரசியலுக்கு கால் கோள்....???**

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் தடங்களை அழித்தமை, குருந்தூர் மலைவிவகாரம் மற்றும் ஏறாவூர் புன்னக்குடா பிரதேசத்தின் பெயரை மாற்றும் முயற்சிகளுக்குப் பின்னாலிருந்த தீய சக்திகளை அரசாங்கம் வெளிச்சத்துக்கு கொண்டு வருவது அவசியம்.

புதிய அரசியல் கலாசாரத்துக்குள் பிரவேசிப்பதற்கான அழைப்புவிடுத்து வரும் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க தலைமையிலான இன்றைய அரசாங்கத்தில் இத்திணிப்பு நடவடிக் கைகள் அதிகரித்துள்ளதால், சிறுபான்மையினர் மீண்டும் அச்ச முற்று அந்நியப்படும் நிலை ஏற்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

தேர்தலொன்றுக்கு தயாராகும் புதிய சூழலில், தென்னிலங்கையை உசுப்பேற்றவும் மகிழ்ச்சிப்படுத்தவும் இவ்வாறான வேலைகளில் சில சக்திகள் இறங்கியுள்ளன.

கடந்தகால செயற்பாடுகளால் தென்னிலங்கை வாக்கு வங்கிகளில் கடும் வீழ்ச்சியைச் சந்தித்த ஒரு சிலரே, இந்நாசகார செயற்பாடுகளுக்கு பின்னாலுள்ளனர். இவர்களைத் தடுத்து நிறுத்தும் திராணியில் ஜனாதிபதி இல்லை. ஜனாதிபதி தேர்தலில் இவர்களது ஆதரவுடன் போட்டியிடவுள்ள ரணில் விக்ரமசிங்க, சிறுபான்மைச் சமூகங்களைச் சீண்டும் செயற்பாட்டாளர்களை கண்டு கொள்ளாதுள்ளாரா? என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டு ள்ளது.

எனவே, பெரும்பான்மைவாதத்துடன் ஆட்சிபீடமேறும் மனநிலையில் ரணில் விக்ரமசிங்க உள்ளாரென்பது உறுதியாகும் பட்சத்தில், அரசாங்கத்தில் உள்ள தமிழ் தலைமைகள் வெளியேற வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

இலங்கையின் சில வர்த்தக வங்கிகளில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி இன்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மக்கள் வங்கியின் படி, அமெரிக்க டாலரின் வாங்குதல் மற்றும் விற்பனை விகிதங்கள் ரூ. 316.41 மற்றும் ரூ. நேற்றுடன் ஒப்பிடுகையில் முறையே 339.19.

கொமர்ஷல் வங்கியில், அமெரிக்க டாலரின் கொள்முதல் விகிதம் ரூ. 316.71 ஆகவும், விற்பனை விலையும் ரூ. 335.

இதற்கிடையில், சம்பத் வங்கியில், அமெரிக்க டாலரின் கொள்முதல் மற்றும் விற்பனை விலைகள் மாற்றமின்றி ரூ. 318 மற்றும் ரூ. முறையே 333.

# புதிய ஊழல் ஒழிப்பு சட்டம் மூலத்தில் என்ன இருக்கிறது?

புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தின் மூலம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை சமர்ப்பிப்பதற்கான தற்போதைய சட்டமூலம் இரத்து செய்யப்படும் எனவும், ஜனாதிபதி, உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள், ஆளுநர்கள், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் ஆணைக்குழு உறுப்பினர்களும் சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய ஊழல் ஒழிப்பு சட்டமூலம் உள்ளிட்ட எதிர்வரும் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் போதே நீதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

# தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம்

## மேன்முறையீட்டை எதிர்க்க 60 தமிழ் அமைப்புகள் ஒன்றிணைவு

கனடா, ஒன்ராறியோவின் தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் தொடர்பான சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டை சவால் செய்ய 60 க்கும் மேற்பட்ட தமிழ் கனேடிய அமைப்புகள் ஒன்றிணைந்துள்ளன.

தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம் 2019 ஏப்ரலில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளை உறுதிப்படுத்தவும் அட்டூழியங்கள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்த கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட்டது.

இருப்பினும், சட்டமாக இயற்றப்பட்ட சிறிதுநேரத்திலேயேதமிழர்இனப்படுகொலை கல்வி வாரம், அரசியலமைப்பு சவாலை எதிர்கொண்டது.

பல சிங்களக் குழுக்கள் இந்த சட்டம், அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கூறி, ஒன்ராறியோவின் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தன.

இருந்தபோதும், ஒன்ராறியோ உயர்நீதிமன்ற நீதியரசர் அக்பரலி, இந்த மனுவை நிராகரித்தார். இதன் மூலம் கல்வி வாரம் உறுதிச்செய்யப்பட்டது.

இந்தநிலையில் இந்த கல்வி வாரம் மீண்டும் சட்ட சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் மனுத்தாக்கல் செய்த அதே குழுக்கள் கல்வி வாரத்தை எதிர்த்து ஒன்ராறியோவின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளன.

இதனையடுத்து கடந்த வார இறுதியில், கனடியத் தமிழர்களின் தேசிய சபை, தமிழ் இளைஞர் அமைப்பு, கனடிய தமிழ் இளைஞர் கூட்டமைப்பு மற்றும் கனேடியத் தமிழ் கல்வியகம் உட்பட்ட 60 அமைப்புக்கள் நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளன.

நிகழ்வின் இறுதியில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், 'வரலாறு மீண்டும் மீண்டும் நினைவூட்டுவது போல், குற்றவாளிகள் எப்போதும் இனப்படுகொலையை மறுத்துள்ளனர்.

இது தமிழ் இனப்படுகொலை கல்வி வாரத்தை மையமாகக்கொண்ட யோசனை 104ஐ இலக்காகக் கொண்ட திட்டமிட்ட முயற்சியாகும்.

எப்போதும் தமிழ் இனப்படுகொலை மறுப்பாளர்கள் தமிழ் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களை மௌனமாக்குவதில் தீவிரமாக செயல்படுவதைக் இது காட்டுகிறது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இனப்படுகொலையின் பத்து நிலைகளில், மறுப்பு என்பது இறுதிக் கட்டமாகும், அது எப்போதும் இனப்படுகொலைக்கான உறுதியான குறிகாட்டிகளில் ஒன்றாகும் என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கும் QR கோட்டா முறை அறிமுகம்



எதிர்காலத்தில் விவசாயிகளுக்காக கிகீ கோட்டா முறை அறிமுகப்படுத்தப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கிகீ முறையைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், உரப்பிரச்சினையினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த வருடமும் உரங்களுக்கு மேலதிகமாக அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்






முயலகன்

# வரிப்பணத்தில் பாரிய மோசடி

## கல்முனை மாநகர சபையில் நடந்தது என்ன...?

கல்முனை மாநகர சபைக்கு பொது மக்களினால் செலுத்தப்பட்ட வரிப் பணத்தில் சுமார் இரண்டு கோடி ரூபா காணாமல் போன விடயம் கடந்த பெப்ரவரி மாதம் அம்பலமாகியது. இதனை அடுத்து சமூக ஊடகங்களிலும் துண்டு பிரசுரங்கள் ஊடாகவும் பல்வேறு விமர்சனக் கருத்துக்கள் வெளியாகி இருந்தன.

கல்முனை மாநகர சபை பொது மக்களுக்கு சேவை வழங்கும் ஒரு அரச நிறுவனம் என்ற ரீதியில் சீரான சிறப்பான சேவையை வழங்க வேண்டும் என்பதே எமது இந்த கட்டுரையின் எதிர்பார்ப்பாகும்.

*2023.02.01*ஆம் திகதி கல்முனை மாநகர சபை எல்லைக்குள் வாகனத் தரிப்பிட சேவையினை மேற்கொள்வதற்காக செலுத்தப்பட்ட 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான *KMC/RE/23/056086* எனும் இலக்க பற்றுச்சீட்டு எந்தவித அனுமதியுமின்றி இரத்து செய்யப்பட்டதன் ஊடாகவே இந்த நிதி மோசடி தெரியவந்துள்ளது.

வாகனத் தரிப்பிடத்திற்கான கோவையில் இந்த குத்தகைப் பணம் வரவு வைக்கப்பட்டு கட்ட வேண்டிய தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. எனினும், மேற்படி சேவைப் பெறுநருக்கு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதன் பிற்பாடு அத்தொகையானது கணக்கிற்கு வரவு வைக்கப்படாமல் இரத்து செய்யப்பட்டுள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது. இது போன்று மாநகர சபையின் வருமானமும் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

இவை போன்று, கல்முனை மாநகர சபையின் பெயரில் 2020.01.01ஆம் திகதி தொடக்கம் 2023.02.15ஆம் திகதி வரையான 38 மாதங்களுக்குள் வழங்கப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 2,709 பற்றுச்சீட்டுகள் உரிய அதிகாரிகளின் எந்தவித அனுமதியுமின்றி *TaxMan* எனும் மென்பொருளின் ஊடாகவே இரத்துச் செய்யப்பட்டுள்ள விடயம் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

அது மாத்திரமல்லாமல், உள்ளீடு செய்யப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் 830 தரவுகளில் வருமான வரிக்கோவை இலக்கங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் 892 புதிய வரிக் கோவைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இந்த மென்பொருளில் காணப்பட்ட பல அடிப்படைத் தரவுகளில்; அட்மின் கடவுச்சொல்லினைப் (*Password*) பயன்படுத்தி பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து நிதிப் பிரிவில் பணியாற்றிய இருவர் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். விளக்க மறியல் காலம் 14 நாட்கள் முடிவடைந்து கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது, போலீஸ் தரப்பினர் இன்னும் விசாரணைகள் முடிவடையவில்லை என நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து விளக்கமறியல் இம்மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

'நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் அரச நிறுவனமொன்றில் ஒரு பற்றுச்சீட்டு இரத்து செய்யப்பட்டிருப்பின் அது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனினும், கல்முனை மாநகர சபையில் இரத்துச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகளில் எவையும் அவ்வாறு காணப்படவில்லை' என கணக்காளர் தலைமையிலான குழு இதன்போது சுட்டிக் காட்டியிருந்தது. மாகாண கணக்காய்வு திணைக்களத்தினால் கல்முனை மாநகர சபைக்கு மாதம் இரு முறை கணக்காய்வுக்காக வந்தும், கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வந்த இந்த நிதி மோசடியினை கண்டு பிடிக்க முடியாமல் போயுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**ஊர்வாதத்தை கிளப்பி ஊழலை மறைக்க முயற்சி**

பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டிய கல்முனை மாநகர சபை, அதன் நிருவாகம் குறித்த நிதியை கையாளும் விடயத்தில் அலட்சியப் போக்கோடு செயல்பட்டு இருக்கிறதா? அல்லது திட்டமிடப்பட்ட கவனயீனமா? என்பது குறித்து தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில், இங்கு கடமையாற்றும் நிர்வாக அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதை வைத்துக் கொண்டு குறித்து அந்த கிராமத்தையோ அல்லது அந்த பிரதேசத்தயோ பாதிக்கின்ற வகையில் பிரதேசத்தில் வசிக்கின்ற பதவி நிலை அதிகாரிகளை மையப்படுத்தி சமூக ஊடகங்களில் பதிவுகளை வெளியிடுவது குறித்த பிரதேசத்தில் வசிக்கும் ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி நிறுவனங்கள் அரச நிறுவனங்களாக காணப்பட்டாலும், கிராம மட்ட மக்கள் பிரதிநிதிகளை கொண்ட ஒரு அரசியல் சபையோடு நிறுவப்படுகின்ற நிறுவனங்களாகும். இங்கு நிர்வாக முறைமையை சீராக முன்னெடுப்பதற்காக அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள். அரசியலுக்கு அப்பால் பொதுமக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வழங்கப்பட வேண்டிய சேவைகள் தங்கு தடையின்றி வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்

கல்முனை மாநகர சபையில் ஊழல் மோசடி குறித்து விசாரணை முன்னெடுக்கப்படும் சூழலில், அரசியல் சாயம் பூசி, பிரதேச வாத கருத்துக்களை தவித்து, கல்முனை மாநகர சபை பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் ஓர் உள்ளாட்சி மன்றமாக மாற்றப்பட வேண்டியது பொதுமக்களாகிய எமது கடுமையாகும்.



# ஜனாஸா எரிப்புக்கான வர்த்தமானி பாராளுமன்ற சிறப்புரிமை மீறல்

## சபையில் அடித்துக் கூறினார் அதாவுல்லா

**நிப்ராஸ்**

ராஜபக்ஷக்களோடு இருந்த காலத்திலும் யோக்கியத்துடன்தான் தேசிய காங்கிரஸ் செயலாற்றியதை அப்போது எவரும் கண்டுகொள்ள வில்லை. கண்டிருந்த சிலரும் அரசியலுக்காக இதைக் காணாதிருந்துள்ளனர். இவ்வாறு காணாதிருந்த சில முஸ்லிம் தலைமைகள், தேசிய காங்கிரஸின் தலைமையை கிழக்கின் களத்திலிருந்து கழற்றிவிட இயன்றளவில் முயன்றன. ஆனால், படைபோல் வரும் எதிர்ப்பும் ஒரு நாள், பனிபோல் விலகும் என்ற நம்பிக்கையில்தான் அதாஉல்லா இருந்தார். அந்தப்பனி இன்று வந்து, எதிரிப் படைகளைப் புறந்தள்ளியுள்ளது.

இஸ்லாத்தின் ஆரம்பப் போர்கள் பல, பனி மற்றும் புயல் உள்ளிட்ட பௌதீகக் காரணங்களாலும் வெல்லப்பட்டிருக்கின்றன. இந்த வரலாறு, தேசிய காங்கிரஸின் தலைமையை திடப்படுத்தியிருக்கலாம். கொரோனாவில் மரணித்த முஸ்லிம் ஜனாசாக்களை எரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம், அன்றிருந்த ராஜபக்ஷக்களை சர்வதேச பரப்பிலிருந்து குறிப்பாக முஸ்லிம் உலகிலிருந்து தனிமைப்படுத்தின. உலக நடைமுறையிலில்லாத, விஞ்ஞான அறிவுக்குப் பொருந்தாத இந்தக் காரியம், பழிவாங்கும் அரசியல் பின்னணியிலிருப்பதாகவே பார்க்கப்பட்டது.

இத்தனை பரபரப்புக்குள்ளும் ராஜபக்ஷக்களுடன் தேசிய காங்கிரஸ் தேனிலவு உறவிலிருப்பதாக ஏனைய முஸ்லிம் தலைமைகள் எள்ளி நகையாடின. ஏளனத்துடன் ஒதுக்கின. இந்த எரிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்த அதாஉல்லாவின் அத்தனை காரியங்களையும் ஏற்க மறுத்தனர். ஆனால், கிழக்கின் திரை கிழிந்து உண்மையை வெளிவர வைத்தது அதாஉல்லாவின் உரை. பாராளுமன்றத்தினதும் பாராளுமன்ற உறுப்பினர்களதும் சிறப்புரிமை மீறல் விவாதத்தில் (21) உரையாற்றிய அவர், கொரோனாத் தொற்றில் உயிரிழந்தவர்களை கட்டாயம் எரிக்க வேண்டும் என்று வெளியிடப்பட்ட வர்த்தமானி, பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை மீறியிருந்ததை, அன்றே (2020) சுட்டிக்காட்டியதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சருக்கிருந்த அதிகாரத்தால், அவ்வாறான வர்த்தமானி வெளி யிடப்பட்டிருந்தாலும், பாராளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டு சகல எம்பிக்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் என்பதும் அவரது விவாதமாக இருந்தது. இதிலிருந்து முஸ்லிம்களின் ஜனாசாவை எரிக்க வேண்டும் என்ற வர்த்தமானி யாருக்கும் தெரியாமல் வெளியானது என்பது தெளிவாகிறது. இதுவல்ல பிரச்சினை, இப்படி நிகழ்ந்தும் அதாஉல்லா இவர்களோடு இருந்தார் என்பதுதான். ஆனால், உச்சளவில் முயன்றிருந்த இவரது முனைப்புக்களை சிலரின், முறைகேடான முன்னகர்த்தல்கள் கேலிக்கூத்தாக்கின என்கிறார் இவர். நீதிமன்றம் சென்றிருந்தும் நியாயத்தை பெறுமளவு நிலைமைகள் இருக்கவில்லை. பாராளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை பற்றி, பாராளுமன்றந்தான் முடிவு எடுக்க வேண்டுமெனக் கருதிய நீதிமன்றம், இவ்விடயத்தை விசாரணைக்கே எடுக்காதிருந்தது. சடலங்களை எரித்தலில் உள்ள வலியோடு சம்மந்தப்பட்டிருந்த எம்பிக்கள் எல்லோரும் இந்தச் சிறப்புரிமை மீறலை அன்று தூக்கிப் பிடித்திருந்தால். இதைவிடுத்து, இந்த முன்னகர்த்தல்களை அரசியல் விளம்பரம் மற்றும் மூலதனத்ததுக்காக முடுக்கி விட்டதுதான் அவரது கவலை.

## முஸ்லிம் தலைமைகளின் ஒன்றுபட்ட கருத்து எப்போது?



ஒத்துழைத்திருந்தால் ஒரு கை பார்த்திருக்கலாம். பின்னர் இதிலுள்ள பங்கை யாராயிலும் பிரித்திருக்கலாம், அல்லது பொறுக்கி எடுத்திருக்கலாம். பதறப்பதற எரிந்துபோனஜனாசாக்களின்பரிதாபத்திலும் அரசியல் பாரபட்சம் பார்க்கப்பட்டிருக்கிறது. இந்தளவுக்கு தரம் கெட்டுள்ள முஸ்லிம் அரசியலுக்கு இனியும், தனித்துவ தலைமைகள் தேவைதானா?

நாட்டின் பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி எடுத்த முயற்சியைப் பாராட்டிய தேசிய காங்கிரஸ், வாக்களித்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவிகள் கிடைத்ததும் காலத்தால் அழியாத வெற்றி என்றார். இதேபோன்று இன்னுமொரு காலத்தால் அழியாத விடயமாகவே, கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்களை எரிப்பதற்கென்று வெளியான வர்த்தமானி பற்றி மனம் திறந்தார்.

கட்டாயம் எரிக்க வேண்டும் என்ற இவ்வர்த்தமானி, பாராளுமன்றத்தினதும், எம்பிக்களதும் சிறப்புரிமைகளை மீறியுள்ளதாக அன்றே சுட்டிக் காட்டினார். இது குறித்து தனிநபர் பிரேரணை ஒன்றை எழுத்து மூலம் தருமாறு அவரிடம் கோரப்பட்டது.

உலகெங்கிலும் அடக்கவும். எரிக்கவும் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, இலங்கையில் மட்டும் சடலங்கள் எரிக்கப்பட்டதற்கு கொடிய குரோதங்களே பின்னணியிலிருந்துள்ளன. இதில், தேசிய காங்கிரஸ் தெளிவுடன் இருந்துள்ளது.

மற்றும் அரசியல் அதிகாரம், சுதந்திரம் என்பவற்றை எல்லைக் கோடுகளுக்குள் மட்டுப்படுத்த இக்கட்சி விரும்பவில்லை. ஆனால், ஏனைய முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடும் இதுபோல், தெளிவுபடுத்தப்படல் அவசியம். மதில்மேல் பூனையாக முஸ்லிம் அரசியல் இனியும் இருக்கக் கூடாது என்ற புதிய சிந்தனைகள் முளைத்து வருவதால், அவசரமாக இதுபற்றி ஏனையமுஸ்லிம் தலைமைகள் பிரகடனஞ்செய்வதே சிறந்தது.

மதத்தை பின்பற்றுதல், விரும்பிய இடத்தில் வாழ்தல், பொருத்தமான தொழிலைச் செய்வதற்கு அனுமதித்தல் இவைகள்தான் உண்மையான சுதந்திரம். இயற்கைக்கு கோடுபோட்டு, நிலங்களுக்கு எல்லை வகுப்பதால் எந்தத் தீர்வும் ஏற்படாது என்கிறது தேசிய காங்கிரஸ். சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுள்ள ரணிலின் புதிய நிலைப்பாடும் இதன் சாயலிலே உள்ளதாக உணரப்படுகிறது.

இந்நிலைப்பாடுகள் இயைந்து சென்றால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய காங்கிரஸின் தெரிவு ரணிலாகவே இருக்கப் போகிறது. பொருளாதார மீட்சியை முன்னிலைப்படுத்தி புறப்படவுள்ள ரணிலின் புதிய அரசியல் பயணத்தில், பிராந்திய மற்றும் இன அடையாளங்களுக்கு அதிகாரங்களைக் கோரும் அரசியல் சிந்தனைகள், புறந்தள்ளப்படவே செய்யும்




# ஏறாவூர் புன்னைகுடா வீதிக்கு சிங்கள பெயர் சூட்டும் ஆளுநர்

## கொதித்தெழும் பிரதேச மக்கள்

✍ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

தொன்று தொட்டு ''ஏறாவூர் புன்னைக் குடா வீதி'' என புழக்கத்திலிருந்து வரும் புன்னைக்குடா வீதியின் பெயரை ''எல்விஸ் வல்கம'' வீதி என சிங்களப் பெயராக மாற்றுவதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளது பிரதேசத்தில் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஆளுநரின் உத்தரவு வெளியானதை அடுத்து ஏற்கெனவே ஏறாவூர் நகரை ஊடறுத்துச் செல்லும் கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் இரு மருங்கிலும் அறிவித்தலாக அமைக்கப்பட்டிருந்த புன்னைக்குடா வீதி என்ற பெயர்ப் பலகை அகற்றப்பட்டிருக்கிறது.



இந்த அறிவித்தல் வெளியாகி ஏறாவூரில் பதற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான நஸீர் அஹமட் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.


அதில், பாரம்பரியமாக புன்னைக்குடா வீதி என இருந்து வரும் பெயர் மாற்றம் பெறாது. பெயர் மாற்ற செயற்பாடுகளை உடன் நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திடீர் பெயர்மாற்ற செயற்பாடானது கண்டிக்கத்தக்கதோடு ஆளுநரின் அதிகார எல்லையை மீறும் செயற்பாடாகும். இவ்வாறான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதை ஆளுநர் உடனடியாக நிறுத்த வேண்டும்'' என்று தெரிவித்திருந்தார்.

கொழும்பு - மட்டக்களப்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் நகரிலிருந்து சுமார் 5.23 கிலோமீற்றர் தூரத்தில் புன்னைக்குடாக் கடல் அமைந்திருக்கிறது. இது வங்காளக் கடல் பகுதியாகும்.

ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பிருந்தே பூர்வீகமாக இந்த வீதி புன்னைக்குடா வீதி என்றே அழைக்கப்பட்டு வந்திருக்கிறது. புன்னை மரங்கள் அங்கு அதிகமிருந்ததால் இது காரணப் பெயராகியுள்ளது. புன்னைக்குடா வீதி ஏறாவூர் நகர், ஐயங்கேணி, அப்துல் மஜீத் மாவத்தை, அத்துப்பிட்டி, தளவாய் ஆகிய முஸ்லிம் தமிழ்க் கிராமங்களை ஊடறுத்துச் செல்கின்றது.

ஏறாவூர் நகர பிரதேசம் நூறு சத வீதம் முஸ்லிம் சமூகத்தைக் கொண்டமைந்திருந்தபோதும் கூட அந்த வீதிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவரினதும் பெயரைச் சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், திடீரென தென்பகுதி காலிப் பிரதேச சிங்கள சமூகத்தைச் சேர்ந்த 9 பேர் ஆளுநருக்கு ஒரு கடிதத்தை எழுதியுள்ளனர். அதில் ஏறாவூர் புன்னைக்குடா வீதிக்கு ''எல்விஸ் வல்கம'' என பெயரை மாற்றுமாறு கோரியுள்ளனர்.

அந்த வேண்டுகோளை உடனடியாக அமுல்படுத்தும் நடவடிக்கையில் ஆளுநர் இறங்கி உத்தரவையும் பிறப்பித்துள்ளார்.


NIC No- 195508210113
(MBBS) Sri Lanka. Reg.No. 8662
(Ex-DMO of Horowpothana. and Balapitiya)
Medico-Legal Advicer/ Social Worker
Medical Centre .Delgoda. 11700

31 JAN 2023
Office of the Governor Eastern Province Trincomalee

1 The Hon.Governor. said office, Trincomalee
2 The Hon Chiarman, Town council, Eravur
3 The Secretary ,Said office , Eravur
4. P.M. Post office Eravur
Hon Governor, and Hon Chiarman and the Secretary

**A road to be named as Elmis Walgama Road in Eravur town limit.**

Mr Elmis Walgama was born in Talpe, a village in the district of Galle. I am very proud to say that He was a real son of Galle. He came to the Eravur at his age of 12 and did schooling there and became an adult there ,and grew-up there.
At the end he, became a leading businessman in Eravur.Most interesting aspect is he was a kind social worker with a big heart.
At his young age he did 600 acres of paddy cultivation in Kopavelly and Sillikodi aru. He had 2 stalls in the market. He helped every body to do paddy cultivation with him. He had a hotel and backery,it was Gaya Hotel. He was a very successful Vender, businessman and a farmer.
He did a lot of social work in and around Eravur.He helped poors.
1 He bought a land with others for the buddhist temple,his name is seen in the deed
2 He helped to build a school for sinhala children in Eravur and now the school is no more for the children.
3 he contructed a water reservoir, Elmis Kulam Tank in kopavelly for the people their with good a vision. He donated a watwer tank to the mother Sri Lanka and it will last forever. What a good deed he did for the nation..Indeed.
4 He helped all the workers who worked under him to be successful farmer, vender with all kindness,
5 He helped all the community, Sinhala, tamil, moslim in a friendly manner and equally.
6 He adopted two tamil kids as his own children and look after them well with his own five children.
7 As he was about to sell his hotel, The Gaya Hotel, He sold it his best worker, He was a moslim boy who worked under him.
8 There are so many things we can write about him ,but no time,

06 FEB 2023
Governor's Secretariat Eastern Province Trincomalee

We all suggest, as he is no more, a road to be named for his name where we can Remember him forever.
Ideal road is the one that runs from the Junction of the Eravur to Punna kuda Sinhala vilage.

**Elmis Walgama Road of the Eravur**

This is a must we do to respect our old generation who did a yeoman service to the Country
Thank you, Your's sincerely . Dr. Sunil Ariyapala

1 DR SUNIL ARIYAPALA
2 R.M.GUNARATNA
3 M.PEMAWATHI
4 TISSA CHANDRASIRI
5 ANOMA PRIYADHARSHINI
6 NALANIE JAYASINHE
7 H.W ASHA
8 H.NUWAN
9 W.M WASANTHA
10

Dr.SUNIL ARIYAPALA
(MBBS) Colombo-1985
Reg.No.8862
Ex-DMO-Balapitiya.
Medico-Legal Advisor
Delgoda.
Tel-075-6065054

காலியைச் சேர்ந்த சிங்கள சமூகத்தவர் அந்த 9 பேரும் விடுத்துள்ள வேண்டுகோளில் ''காலி தல்பே கிராமத்தில் பிறந்து தனது 12வது வயதில் ஏறாவூருக்குப் போய்ச் சேர்ந்து அங்கே வர்த்தகம் செய்து நிலபுலன்களையும் வாங்கியதுடன் இன்னும் பல சேவைகளைச் செய்த ''எல்விஸ் வல்கம'' அவர் காலியின் பெருமைக்குரிய புதல்வனாகும். எனவே அவரது பெயரை ஏறாவூர் புன்னைக்குடா வீதிக்குச் சூட்ட உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறோம் என்று எழுதப்பட்டுள்ளது.

ஆளுநர் ஏற்கெனவே ஏறாவூர் பொதுச் சந்தையை ''ஏறாவூர் சிங்களச் சந்தை'' எனக் குறிப்பிட்டு ஏறாவூர் நகர சபைக்கு கடிதம் அனுப்பியிருந்ததும் அது ஆளுநரது உத்தியோக பூர்வ வலைத் தளத்தில் வெளியாகி பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியவுடன் ஆளுநர் அந்த வார்த்தைப் பிரயோகத்தை மாற்றிக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


மேலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண சபை நிருவாகக் காலத்திலும் உள்ளூராட்சி மன்ற நிருவாகம் கலைக்கப்பட்டிருக்கும் தறுவாயிலும் சந்தர்ப்பத்தைப் பார்த்து கிழக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைகள் முற்று முழுவதுமாக சிங்கள பேரினவாத அமுல்படுத்தலை மையப்படுத்தியதாக இடம்பெற்று வருவதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண ஆளுநர்களாக படை அதிகாரிகள் மற்றும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தோரே நியமிக்கப்பட்டிருந்தபோதும், தற்போதைய ஆளுநரைப் போன்று அவர்கள் நேரடியான சிங்கள மயமாக்கலை நோக்கி செயற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ‘எல்விஸ் வல்கம’ வீதியென பெயர் மாற்ற உத்தரவு

### இதுவரை இடம்பெற்றுள்ள நடவடிக்கைகள்,

இது விடயமாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் ஏறாவூர் நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்


MINISTRY OF ROAD DEVELOPMENT, LAND & LAND DEVELOPMENT,
SKILL & MANPOWER DEVELOPMENT, WOMEN AFFAIRS AND WATER SUPPLY
EASTERN PROVINCE

வீதி அபிவிருத்தி, காணி மற்றும் காணிகள் அபிவிருத்தி, திறன் மற்றும் மனிதவலு அபிவிருத்தி, மகளிர் விவகாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
கிழக்கு மாகாணம்

Your No:
My No: EP/MRD/PL/Road/Gen/2023

RECEIVED
03 MAR 2023
CHIEF ENGINEER'S OFFICE
ROAD DEVELOPMENT DEPARTMENT
BATTICALOA.

02.03.2023

Provincial Director
Department of Road Development
Eastern Province

**A Road to be name as Elmis Walgama Road in Eravur town limit**

Reference to the letter no G/EPC/B/23/R/01 dated 22.02.2023 from the Secretary to the Governor on the above (The letter is annexed herewith)

You are requested to make the necessary action in this regard please

V.Gowritharan
Director of Planning

Sgd
L.P Madanayake
Secretary


Copies:
- Secretary to the Governor
- CE-Batticaloa

Secretary : 026-2224854
Asst Secretary : 026-2227696
: 026-2222848
ADP : 026-2223901
Accountant : 026-2226066
Accounts Unit : 026-2227380
உட்துறைமுக வீதி, திருகோணமலை, இலங்கை.
Innerharbour Road, Trincomalee. Sri Lanka.
AO/General : 026-2222061
Fax : 026-2224029
Email : minroad@ep.gov.lk

ஏறாவூர் புன்னக்குடா வீதி ''எல்மிஸ் வல்கம'' வீதி எனப் பெயர் மாற்றல். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் சார்பாக ஏறாவூர் புன்னக்குடா வீதியினை ''எல்மிஸ் வல்கம'' வீதி என பெயர் மாற்றம் செய்தல் தொடர்பாக கௌரவ ஆளுநர் அலுவலகம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் கடிதப் பிரதிகள் தங்களது மேலதிக நடவடிக்கைகளுக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும், திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரால் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் ஏறாவூர் நகரப் பிரிவில் ''எல்மிஸ் வல்கம'' என பெயர் மாற்றம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதில் விநோதம் என்னவென்றால், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சும் வீதி அவிபிருத்தித் திணைக்களமும் உள்ளூராட்சி மாகாண நிருவாகமும் என்று பல பொறுப்புக்கள் ஆளுநரின் கீழேதான் வருகிறது. ராஜாவும் நானே மந்திரியும் நானே என்ற அதிகாரத் தோரணையில் ஆளுநர் தனது இனவாத விரிவாக்கல் திட்டத்தை தக்க தருணம் பார்த்து சாதித்து வருகிறார் என்று சிறுபான்மையினர் அதிருப்தி வெளியிடுகின்றனர்.


வீதி அபிவிருத்தித் திணைக்களம்
மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கிழக்கு மாகாணம்
[redacted]
**Road Development Department**
Provincial Director's Office, Eastern Province
No: 93A, St. Anthony's of, Hermit Street,Karuweppankerny, Batticaloa

எனது இல / My No : PD/RDD/PLN/P2/WB/2023
திகதி / Date : 02.03.2023

RECEIVED
03 MAR 2023
CHIEF ENGINEER'S OFFICE
ROAD DEVELOPMENT DEPARTMENT
BATTICALOA.

Chief Engineer,
Road Development Department,
Batticaloa.

**A road to be named as Elmis Walgama road in Eravur town limit**

Reference to the letter of Secretary to the Hon.Governor, Eastern Province dated on 24.02.2023 the above subject (The copy of letter is attached herewith).

You are requested to submit the detail report at your earliest please.

Eng. V.Karunanaathan.
Provincial Director,
Road Development Department,
Eastern Province.

Copy to: Secretary to the Governor, Eastern Province. – F.i.pl

Provincial Director : 065-2050066
Administrative Officer: 065-2227207
Accountant: 065-2227943
General : 065-2227372
Fax No: 065-2227307

நீண்ட நாள் தொட்டே இந்தப் புன்னைக்குடாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஒரு கழுகுப் பார்வை பேரினவாதிகளிடம் இருந்து வந்துள்ளதாக நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் 80களில் அந்நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் கிராம அபிவிருத்தி அமைச்சராகவிருந்த கே. டபிள்யூ தேவநாயகம் புன்னைக்குடா மீனவர் கிராமத்தில் 100 வீடுகளை அமைத்தார். ஆனால் கடைசி நேரத்தில்தான் அந்த வீடுகள் வெளி மாவட்டத்திலிருந்து சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியமர்த்துவதற்காக அமைக்கப்படுகிறதென்று தெரிந்தது.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்...

7 ஆம் பக்க தொடர்ச்சி...

## ஏறாவூர் புன்னைகுடா வீதிக்கு...

இதனை அறிந்ததும் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் மட்டக் நகளப்பு மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதியாக இருந்த டொக்டர் பரீட் மீராலெப்பை கடுமையாக எதிர்த்துக் குரலெழுப்பினார். கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. பரீட் மீராலெப்பை தனியொரு ஆளாகத் துணிந்து நின்று எதிர்த்தார். பரீட் மீராலெப்பைக்குப் பக்க பலமாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டிருப்புத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பூ. கணேசலிங்கம் இருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் அல்பேர்ட் சீவரெட்டணம் ஆகியோரும்; பரீட் மீராலெப்பைக்கு ஆதரவாகக் குரலெழுப்பினார்கள்.

பரீட் மீராலெப்பை முன்மொழிய கணேசலிங்கம் வழிமொழிந்து வெளி மாவட்ட சிங்களவர்களுக்கு தனி வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதைக் கண்டித்தும் அவ்வாறு வழங்கப்படக் கூடாது என்றும் அந்த வீட்டுத் திட்டம் உள்ளூர் மீனவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த எதிர்ப்பால் வெளி மாவட்டச் சிங்களவர்களுக்கு வீட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்த ஐதேக அரசின் அமைச்சரான அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகமும் மற்றொரு அமைச்சரான செல்லையா இராஜதுரையும் மௌனித்தனர்.

''புன்னைக்குடாவில் சிங்களவர்களுக்கு தனி வீட்டுத் திட்டம்; பரீட் மீராலெப்பை போர்க் கொடி'' என பத்திரிகைகளில் பிரதான தலைப்புச் செய்தியாக அது வெளிவந்திருந்தது.

பின்னாட்களில் படையினர் முகாம் அமைக்கலாம் என்பதால் ஆயுதப் போராட்ட அமைப்புக்களினால் அந்த வீட்டுத் திட்டம் தரைமட்டமாக்கப்பட்டது.

அந்த வீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் இப்பொழுது மட்டக்களப்பு சிங்கள மயமாகியிருக்கும் என்று கருதுவோரும் உள்ளனர்.

அவ்வாறு அந்தக் கால கட்டத்தில் நடந்த நிகழ்வை உற்றுக் கவனித்து இந்த வேளையில் டொக்டர் பரீட் மீராலெப்பையை தமிழ் பேசும் மக்கள் நினைவு கூர்கின்றனர்.

மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாண சபையை வைத்துக் கொண்டும் உள்ளுராட்சி மன்ற நிருவாகங்கள் கலைக்கப்பட்டிருக்கின்ற வேளையிலுமாகப் பார்த்து ஆளுநர் தன்னிச்சையான முடிவுகளைத் திணித்து அமுல்படுத்துவதானது இனவாத அடிப்படையிலாகும் என்று விமர்சிக்கப்படுகின்றது.

ஆளுநரின் நடவடிக்கைகள் அவ்வாறே அமைந்துள்ளதாக அவதானிப்பாளர்கள் கருதுகின்றனர். மட்டக்களப்பு நகரில் சிங்கள மக்கள் வசிக்காத நிலையிலும் சிங்கள மகாவித்தியாலயத்தைத் திறக்க நடவடிக்கை எடுத்து சிங்கள மகா வித்தியாலயத்திற்கு வாருங்கள் எனத் துண்டுப் பிரசுரங்களை ஒட்டி அழைப்பு விடுத்தும் எவரும் அங்கு செல்லவில்லை.

அதேவேளை, மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினையில் தலையிட்டு அது மகாவலி அபிவிருத்திக் காணி என்று அடையாளப்படுத்தி அங்கு சிங்கள மக்களை அழைப்பித்துப் பயிர்ச் செய்கைக்கு காணி வழங்கியமை. மாகாண சபையை நிருவாக மட்டத்தில் சிங்கள மயமாக்குவதில் கரிசனை இவ்வாறு ஆளுநரின் பலப்பல விடயங்களை அவதானிப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உள்ளூராட்சி மன்ற சட்ட விதிகளின்படி தெருவுக்கு பெயரிடுவதென்றால் அது பற்றிய விவரம் பொதுமக்களுக்கு பொது இடங்களில் அறிவித்தல் இடப்பட்டு மக்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும். ஆட்சேபனைகள் இருந்தால் குறித்த பெயர் வைத்தலைச் செய்ய முடியாது. ஆனால் இவ்வாறான உள்ளூராட்சி சபையின் சட்ட விதிகளையும் மீறி ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆளுநர் சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுக்கானவராக இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக இருந்தபோதும் ஆளுநரின் நடவடிக்கைகள் தனிச் சிங்கள இனம் சார்ந்ததாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதி நல்லிணக்கத்திற்காக எடுக்கும் முயற்சிகளுக்கு ஆளுநரின் நடவடிக்கைகள் குந்தகமாக அமைந்திருக்கின்றன என்பதை நடப்பு நிகழ்வுகள் குறிப்புணர்த்துகின்றன.

காலி மாவட்டத்தைச் சேர்ந்தவரான, தென் பகுதிச் சிங்களவர்கள் கருதும் பெருமகனைக் கௌரவிப்பதற்கு மட்டக்களப்பு ஏறாவூர் தமிழ் பேசும் சமூகத்தார் ஒருபோதும் எதிர்க்கவில்லை. ஆனால், இனவாத நோக்கில் பேரினவாத பரம்பலை மையப்படுத்தும் விதமாக மேற்கொள்ளப்படும் திட்டங்களையே தாம் எதிர்ப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிங்கள பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலின் கீழ் இன்னும் எத்தனையோ திட்டங்கள் இருக்கலாம்.அதனைக் காலம் உணர்த்தி நிற்கும்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஊடக நுழைவு மைய அங்குரார்ப்பணம்



நூருள் ஹுதா உமர்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஊடக அணுகல் மையத்தை தாபிப்பதற்கான நிகழ்வு 30.03.2023ஆம் திகதி கலை கலாசார பீடத்தின் மாணவர் செயற்பாட்டு நிலையத்தில் இடம் பெற்றது.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இன்ஸ்பெயார் *(InSPIRE)* செயற்றிட்டத்தின் முகாமையாளர் திருமதி. சந்துல கும்புக்ககே தலைமையிலான குழுவினர், பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர், பதில் நிதியாளர், சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், கலை கலாசார பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விசார் ஊழியர்கள் மற்றும் மாணவர்கள்; என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் வரவேற்புரை பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. தனது வரவேற்புரையில் ஹெல்விடாஸ் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற மாணவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் தமது பீட மாணவர்களின் அறிவு மற்றும் திறன் விருத்தியில் கணிசமானளவு பங்களிப்பு செய்துள்ளமை தொடர்பில்கருத்துத்தெரிவித்ததுடன் பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரி மற்றும் இதழியல் டிப்ளோமா மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் ஊடகம் மற்றும் இதழியல் தொடர்பான கற்கைகளை உள்ளடக்குவதற்கு பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளமை தொடர்பிலும் குறிப்பிட்டிருந்தார். குறிப்பாக பீடத்தின் மொழித்துறை, அரசியல் விஞ்ஞானத் துறை, மற்றும் சமூகவியல் துறையின் பாடத்திட்டங்கள் இதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளமை குறித்து உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின் முகாமையாளர் திருமதி. சந்துல கும்புக்ககே, ஹெல்விடாஸ் *(HELVETAS)* நிறுவனம் மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுப்பதற்கான காரணங்கள் குறித்தும் எமது பீட மாணவர்களின் வினைத்திறனான பங்குபற்றல் குறித்தும் உரையாற்றினார்.

தொடர்ந்து பிரதம அதிதி உரை பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் அபூபக்கர் றமீஸ் அவர்களினால் நிகழ்த்தப்பட்டது.

உபவேந்தர் தனது உரையில் மாணவர்களின் திறன் விருத்தியில் குறித்த நிறுவனத்தின் பங்களிப்புக்களை பாராட்டியதுடன் பல்கலைக்கழக சமூகம் குறித்த செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ந்தும் ஹெல்விடாஸ் *(HELVETAS)* நிறுவனத்துடன் இணைந்து செயலாற்ற விரும்புவதாகவும் குறிப்பிட்டார். நிகழ்வின் நன்றியுரையினை கலை கலாசார பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எம்.டி. அஸ்ஹர் வழங்கினார்.

இந்நிகழ்வில் இன்ஸ்பெயார் செயற்றிட்டத்தின் கீழ் ஹெல்விடாஸ் *(HELVETAS)* நிறுவனத்தினால் 1.5 மில்லியன் பெறுமதியான ஊடக உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டதுடன் அதற்கான உடன்படிக்கையொன்றும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசியரியர் அபூபக்கர் றமீஸ் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர் திருமதி. சந்துல கும்புக்ககே ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும்








# கண்டி வீசா மையத்தின் இணையத்தளத்தில் நுழைந்து வீசா மோசடி ஒருவர் கைது

இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்த கண்டி வீசா மையத்தின் இணையத்தளத்தில் இரகசியமாக நுழைந்து பெருந்தொகையான பணத்திற்கு இந்திய விசாவை வழங்கிய ஒழுங்கமைக்கப்பட்ட வலையமைப்பு ஒன்றில் பிரதானமாக செயற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய விசாக்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதாக பம்பலப்பிட்டி பிலிப் குணவர்தன மாவத்தையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பிரதான உள்ளூர் பிரதிநிதிக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதையடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக் கமைய பொலிஸ் பரிசோதகர் துமிந்த ஜயதிலக்க உள்ளிட்ட அதிகாரிகள் குழு மேற்கொண்ட .நீண்ட விசாரணையின் பின்னர் சந்தேகநபர் பற்றிய தகவல்களை வெளிக்கொணர முடிந்துள்ளது.

பொலிஸ் மூலோபாய நிபுணர் ஒருவர் சந்தேக நபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்திய வீசாவைப் பெறுவதாக கூறி அவரிடம் சிறிது நேரம் உரையாடி அனைத்து தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.



# வெடியரசன் கோட்டை

## நெடுந்தீவில் தமிழர்களின் அடையாளம்



கி.மு.200 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெடுந்தீவு, நயினாதீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், தொல்புரம், பூநகரி, மன்னார் போன்ற பகுதிகளை ஆட்சிசெய்த ஈழத்தமிழ் மன்னனான விஷ்ணுபுத்திர வெடியரசன் காலத்தில் அமைக்கப்பட்டதே இந்தக் கோட்டை.

நெடுந்தீவு மண்ணின் **'கோட்டைக்காடு'** என அழைக்கப்படும் நெடுந்தீவு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் (ஒ/01) இன்றும் தமிழர் தம் பண்பாட்டு, மரபியல் அடையாளமாகப் பேணப்பட்டு வரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் இது.

விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை பௌத்த தாதுகோபுரத்தின் எச்சமாக நிறுவுவதற்காக தொல்பொருளியல் திணைக்களம் மிகத்துரிதமாக முனைப்புகளை முன்னெடுத்து வருகிறது.

இந்தக் கோட்டைப் பிரச்சினை மிகப் பெரிய சர்ச்சையாக வெடித்திருக்கின்ற நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தொல்பொருள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கில் நடைபெறும் பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டி 2023.03.16 ஆம் திகதி, இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது.

ஸ்ரீதரன் எம்பி, இந்த கடிதத்தில் கூறியுள்ள விடயங்கள், தமிழரின் பாரம்பரிய வரலாற்று அடையாளங்களை கோடிட்டு காட்டுகிறன. அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டிய விடயங்கள் வருமாறு:

போருக்குப் பின்னரான கடந்த 13 ஆண்டுகளில், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுள்ள தமிழ்த்தேசிய இனம் மீதான மொழி, நில, பண்பாட்டு, அடையாள ஆக்கிரமிப்புக்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் மேலும் வீரியமாக மேற்கொள்ளப்படுவதென்பது தமிழ்பேசும் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையிலான இன நல்லிணக்கத்தை அடியோடு சிதைக்கும் நடவடிக்கையாகவே அமையும் என்பதை தாங்களும் உணருவீர்கள் என நம்புகிறேன்.

ஏற்கனவே, நீண்டதோர் போரின் நேரடி விளைவுகளை எதிர்கொண்டு, அதிலிருந்து மீண்டெழ முடியாது தவிக்கும் எமது மக்களது இன, மத, மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்கள் அடியோடு அழிக்கப்பட்டு அல்லது அவ் அடையாளங்களின் முக்கியத்துவமும், தொன்மமும் வலிந்து மறைக்கப்பட்டு அத்தகைய தொல்லிடங்களில் சிங்கள பௌத்த அடையாளங்களான விகாரைகளையும், புத்தர் சிலைகளையும் துறவிமடங்களையும் அமைக்கும் நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் மிக முனைப்போடு செயலுருப்பெற்றுள்ளன.

வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, நிலாவரை, நாவற்குழி, மயிலிட்டி, மண்ணித்தலை, உருத்திரபுரம், கச்சதீவு, கன்னியா வெந்நீரூற்று என நீளும் இவ் ஆக்கிரமிப்புப் பட்டியல் தற்போது நெடுந்தீவின் வெடியரசன் கோட்டை வரை தனது ஆக்கிரமிப்பின் கால்களை ஆழப் பதித்துள்ளமை, இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களின் இயல்புவாழ்வு குறித்த அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

> **'வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, நிலாவரை, நாவற்குழி, மயிலிட்டி, மண்ணித்தலை, உருத்திரபுரம், கன்னியா வெந்நீரூற்று.... என நீளும் ஆக்கிரமிப்புப் பட்டியல்'**

பௌத்தம் என்பது ஓர் மத அடையாளமே அன்றி சிங்கள இனத்துக்கான அடையாளம் அல்ல என்பதை அடியோடு மறுத்து தமிழினத்தின் மீது கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுப் படுகொலையை நிகழ்த்துவதென்பது, இந்த நாட்டின் ஆட்சியாளரான தங்களின் தாராளவாதம் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

தொல்பொருள் கட்டளைச்சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை **'துறவிமடம்'** என்னும் பெயரிலான தொல்லியல் ஒதுக்கிடமாக வெளிப்படுத்தி 2020.11.26ஆம் திகதிய, 2203/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்பட்டமை பற்றி துறைசார் இராஜாங்க அமைச்சர் கௌரவ.விதுர விக்ரமநாயக்க அவர்களுக்கு 2020.12.18 ஆம் திகதி நான் எழுத்துமூல கோரிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தும் அது கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவின் மாவிலி இறங்குதுறையிலும், கோட்டைப் பகுதியிலும் புதிதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிங்களம் மற்றும் ஆங்கில மொழியிலான விளம்பரப் பலகைகளில் தற்போதுள்ள கோட்டையின் பாகங்கள் பௌத்த தாது கோபுரத்தின் எச்சங்கள் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் மூலம் மிகப்பாரதூரமான வரலாற்றுத் திரிபுக்கான முன்னகர்வுகள் தொல்பொருளியல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டின் சுதேசிய இனமான தமிழ்த் தேசிய இனத்தின் தொன்மம்மிகு அடையாளங்களை சிதைத்தழித்து, தொல்பொருள் என்ற போர்வையில் அவற்றை சிங்கள பௌத்த அடையாளங்களாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவும், நெடுந்தீவு விஷ்ணுபுத்திர வெடியரசன் கோட்டையை தொடர்ந்தும் தமிழர்களின் பாரம்பரிய அடையாளமாக பேணிப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, மக்களின் கோரிக்கையாக இதனை தங்களுக்கு முன்னளிப்புச் செய்கிறேன் - என்றுள்ளது.

### சி.வி கடும் கண்டனம்

இதே வேளை, யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியிலுள்ள புராதன முக்கியத்துவம் வாய்ந்த வெடியரசன் கோட்டையானது புராதன பௌத்த முக்கியத்துவம் வாய்ந்த இடிபாடுகளைக் கொண்ட பகுதியென அடையாளப்படுத்தி, அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ள சம்பவத்திற்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி கண்டனம் வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா கடற்படையினரால் இந்த பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ள தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், வரலாற்று ரீதியான உண்மைகளை சிதைக்கும் நடவடிக்கை என விமர்சித்துள்ளார்.

இவ்வாறான விடயங்களை ஆதாரங்களுடன் சர்வதேச நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள் மற்றும் தூதரகங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்



# அரசியல் கைதிகள் குற்றவாளிகள் அல்ல

அருட்தந்தை மா . சக்திவேல்

பொதுமன்னிப்பு என குற்றவாளியாக முத்திரை குத்தி விடுதலை செய்வதை ஏற்க முடியாதென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் அண்மையில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத தடை சட்டத்தினால் 15 வருட வாழ்வை தொலைத்துவிட்ட அரசியல் கைதியான கிளிநொச்சியை சேர்ந்த விவேகானந்தனூர் சதீஷ்குமார் இன்று வெளி உலகையும் குடும்பத்தையும் காணும் வாய்ப்பை பெற்றுள்ளார். சிறையில் வாடும் ஏனைய அரசியல் கைதிகளும் துரிதமாக விடுதலை செய்யப்படல் வேண்டும் என்றும் எந்த வடிவத்திலும் பயங்கரவாத தடைச்சட்டம் இனிமேலும் தொடர்வதற்கு தெற்கின் சமூகம் இடமளிக்கூடாது என்றும் அதற்கான அழுத்தத்தை தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்பது பயங்கரவாதத்தை ஏற்பதற்கு ஒப்பானது**

சதீஷ்குமார் மற்றும் அவருடைய குடும்பத்தாருடைய தனிப்பட்ட மகிழ்வில் நாமும் பங்கு கொடுக்கின்றோம். ஆனால் பொது மன்னிப்பு என குற்றவாளியாக முத்திரை குத்தப்பட்டு அரசியல் கைதிகளை விடுதலை என வெளியில் அனுப்புவதை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு என்றுமே ஏற்றுக் கொள்வதில்லை.

அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு என்பது அரசு பயங்கரவாதத்தினை அங்கீகரிப்பதாகவும் அதற்கு எதிரான மக்களின் விடுதலை செயற்பாட்டினை தொடர்ந்து பயங்கரவாதமாக்குவதுமானசெயலுமாகும். அரசியல் கைதியான சதீஷ்குமாரின் விடயத்திலும் அதுவே மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளின் என்போர் தேசத்துரோகிகள் அல்ல. பயங்கரவாதிகளும் அல்ல. அவர்களை குற்றவாளிகளாக அடையாளப்படுத்தி காலத்திற்கு காலம் ஜனாதிபதிகள் விடுதலை என வெளியில் அனுப்புவது என்பது தமிழ் மக்களையும் தமிழர்களின் அரசியல் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தி அவமதிக்கும் செயலாகும்.

தற்போதைய ஜனாதிபதி 25 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் இன பிரச்சனைக்கான தீர்வு என்று நாடாளுமன்றத்தில் கொக்கரித்தார். தமிழ் மக்கள் விரும்பாத 13ம் யாப்பு திருத்தத்தை அமுல்படுத்தப் போவதாக அரசியல் நாடகம் ஆடினார்.

அரசியல் யாப்பில் உள்ள 13 ஆம் யாப்பு திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று கூறி, பெருமளவான பிக்குகள் வீதி போராட்டத்தை நிகழ்த்தினார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் இவர்களுக்கு எதிராக பாயவில்லை. இவர்களா தேசப்பற்றாளர்கள்?

விடுதலை செயற்பாட்டை பயங்கரவாதமாக்கி அதற்கு துணையாக பயங்கரவாத தடை சட்டத்தை கொண்டு வந்து 44 ஆண்டு காலமாக பாதுகாப்பதும் 75 வது சுதந்திர ஆண்டிலும் அதன் பாதுகாப்பிலே ஆட்சி செய்ய நினைப்பதும் அச்சட்டத்தினை புது பெயரில் தொடர வழி சமைப்பதும் பயங்கரவாதமாகும்.

கைதிகளையும் அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனை இன்றி விடுதலை செய்வதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கை எடுப்பது தமிழர்களின் அரசியல் தீர்வு காண ஆரம்ப செயற்பாடு என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அன்று குட்டிமணி கூறியது போன்று தற்போது அரசு பயங்கரவாதம் வேறு வடிவத்தில் தெற்கு பக்கம் திரும்பி உள்ளது. இதற்கு எதிரான தெற்கின் சக்திகள் தமிழ் மக்களுடைய அரசியலை அங்கீகரித்து அதனை ஏற்றுக் கொள்வதன் மூலம் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிரான செயற்பாட்டை இன்னும் தீவிரபடுத்த முடியும். இல்லையேல் நாடு தொடர்ந்து பிளவுபட்டே இருக்கும் என்பதையும் தெற்கின் சக்திகள் உணர வேண்டும்.- என்றார்

# இலங்கையில் இளம் பொருளியல் பேராசிரியராக கலாநிதி கணேஸ் சுரேஸ் பதவியுயர்வு!

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் கற்கை அலகின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கணேஸ் சுரேஸ் அவர்களுக்கு பொருளியல் பேராசிரியர் பதவி உயர்விற்கான அங்கீகாரத்தை பல்கலைக்கழக பேரவை வழங்கி உள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில் (25.03.2023) இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை மற்றும் மதிப்பீட்டிற்கு அமைய இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கலாநிதி கணேஸ் சுரேஸ் இலங்கையில் உள்ள பொருளியல் பாட பேராசிரியர்களுக்குள் இளவயதுப் பேராசிரியர் என்பதுடன் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாச்சார பீடத்தின் இளவயதுப் பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது கலாநிதி கற்கை நெறியை



அவுஸ்ரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து தொழிநுட்ப பல்கலைக்கழகத்திலும், முதுமாணிக் கற்கைநெறியினை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் தனது இளமாணிப் பொருளியல் சிறப்புக் கற்கை நெறியினை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்திருந்தார்.

## இவர் பெரிய நீலாவணையை சேர்ந்தவர். கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி பழைய மாணவன்.

அவுஸ்ரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து தொழிநுட்ப பல்கலைக் கழகத்திலும், முதுமாணிக் கற்கைநெறியினை கொழும்பு பல்கலைக் கழகத்திலும் தனது இளமாணிப் பொருளியல் சிறப்புக் கற்கை நெறியினை கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் பூர்த்தி செய்திருந்தார்.

இவர் தனது கலாநிதி கற்கை நெறிக்கான ஆய்வினை சுற்றுலா மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது ஆராய்ச்சிகளை உலகத் தரம் வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளியிட்டிருந்தமை இவரது புலமையை வெளிக்காட்டுகின்றது.

இவர் கனடா, அவுஸ்ரேலியா, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளில் ஆய்வுக் கருத்தரங்குகளிலும் பங்கேற்றுள்ளார்.

கணேஸ், தவமணிதேவி தம்பதியினரின் மூத்த புதல்வரான கலாநிதி. கணேஸ் சுரேஸ் பெரியநீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்திலும், இடைநிலை மற்றும் உயர்தரக்கல்வியினை கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையிலும் தொடர்ந்திருந்தார்.

கலாநிதி கணேஸ் சுரேஸ் சிறந்த சமூகப்பற்றாளரும் பிரதேச அபிவிருத்தியில் அதிகளவு ஆர்வமுடையவருமாவார்.

சரித்திரப் பார்வை
சஞ்சீவி சிவகுமார்



# இந்தியப் படங்களின் ஒஸ்கார் பயணங்கள்:

## தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ் வரையான ஒரு வரலாற்று நோக்கு

✍ சஞ்சீவி சிவகுமார்

2023 ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருதின் அறிவிப்புகள் (95வது ஒஸ்கார் விருதுகள்) அண்மையில் வெளிவந்திருந்தன. அதில் தமிழ் மொழியில் அமைந்த *The Elephant Whisperers* ஆவணப் படம் இம்முறை விருதினைப் பெற்று தமிழர்களை பெருமிதப்படவைத்தது. தமிழ் நாடு நீலகிரி மாவட்டத்தில் முதுமலைப்பகுதியில் படமாக்கப்பட்ட இப்படம் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் யானைகள் மனித சகவாசத்துடன் ஒன்றாய் வாழ்வதற்காக வாய்ப்புச் சூழலையும் எத்திவைக்கின்றது. ஒஸ்கார் வரை சென்ற ஒரு ஆவண படத்தை தமிழில் கண்டுகளிப்பது மனதுக்கு உற்சாகம் தருவதே.

ஒஸ்கார் விருது அல்லது அகடமி விருதானது, திரைப்படங்கள் மற்றும் ஏனைய படங்களுக்காக உலக அளவில் வழங்கப்படும் உயர் விருதாகக் கருதப்படுகின்றது. படங்களுக்காக இருபத்திநான்கு தனித்தனித் துறைகளில் ஒஸ்கார் விருதுகள் தரப்படுகின்றன.

1929 களில் இருந்து ஒஸ்கார் திரைப்பட விருதுகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய திரைப்படத் துறை 1957 களிலிருந்து ஒஸ்கார் விருதுக்காக தனது விண்ணப்பங்களை அனுப்பி வருகிறது. திரைப்படத்துறையில் உச்சபட்ச விருதாக கருதப்படும் ஒஸ்கார் விருதுக்கு இந்தியாவின் படங்களுக்கு பரிந்துரை செய்து விருதுக்கான விண்ணப்பங்களை முறைப்படுத்த ஒரு அரச குழுவைக் கொண்டுள்ளது.

இந்தியா தனது முதலாவது ஒஸ்கார் விருதுக்கான விண்ணப்பத்தை 1957 இல் (30வது ஒஸ்கார் விருது) மெஹ்பூப்கானின் இயக்கத்தில் வெளிவந்த 'மதர் இந்தியா' எனும் இந்தி திரைப்படத்துக்கு சமர்ப்பித்தது. இந்தத் திரைப்படம் ஒஸ்கார் விருதுக்கு விருதுக் குழுவினால் பரிந்துரையும் செய்யப்பட்டது. ஆயினும் இறுதித் தேர்வில் போட்டிக்கு நின்ற *Night of Cabiria* என்ற இத்தாலிய திரைப்படத்துடன் போட்டியிட்டதில் ஒரு வாக்கினால் அது தோல்வி கண்டது.


இந்தியாவின் முதலாவது ஒஸ்கார் அடைவு 1982இல் 55 ஆவது அகாடமி விருதின்போது கிடைத்தது. 'காந்தி' திரைப்படத்திற்கு சிறந்த திரைப்படம், சிறந்த இயக்கம், சிறந்த நடிகர், சிறந்த வடிவமைப்பு, ஆடை அலங்காரம் உட்பட எட்டு விருதுகளுக்கு தெரிவு செய்யப்பட்டது.


இதனை தொடர்ந்து 2009இல் *Slumdog Millionaire* என்ற பிரித்தானிய திரைப்படத்துக்கு சிறந்த ஒலிக்கலவை இசையமைப்பு என்பவற்றுக்காக ரசூல் பூக்குட்டி மற்றும் ஏ ஆர் ரகுமான் ஆகியோர் விருதினை பெற்றுக் கொண்டனர். இதே படத்தில் *'Jai ho'* என்ற பாடல் சிறந்த ஒரிஜினல் பாடல் வகைக்கான ஒஸ்கார் விருதினையும் பெற்றுக் கொண்டது. பாடலாக்கத்துக்காக குல்சார் என்பவர் விருதினை பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து 2010இல் *Slumdog Millionaire* படத்தின் இயக்குனரான *Danny Boyle* இன் இயக்கத்திலே வெளிவந்த *127 hours* என்னும் படத்துக்காக சிறந்த ஒரிஜினல் பாடல் விருதினை ஏ ஆர் ரகுமான் தனதாக்கிக் கொள்கிறார்.

இந்த வகையில் இரண்டு ஒஸ்கர் விருதுகளை பெற்ற இந்தியர் என்ற பெருமை ஏ ஆர் ரகுமானுக்கு கிடைக்கிறது. ஆங்கில மொழியிலான திரைப்படங்களில் ஏ ஆர் ரகுமான் காட்டிய திறமைக்காக இவ்வெற்றி பெறப்பட்ட போதிலும் தமிழர் ஒருவருக்கு கிடைத்த விருது என்ற அடிப்படையில் தமிழர்கள் அவரைக் கொண்டாடினர்.

இந்தியா தொடர்ச்சியாக ஒஸ்கார் விருதுக்காக திரைப்படங்களையும் மேலும் விஞ்ஞான தொழில்நுட்ப துறைக்கான ஒஸ்கார் விருதுகளுக்கு இரண்டு






படங்களையும் இது வரை சமர்பித்துள்ளது. அதி கூடியதாக இந்தி மொழியில் மட்டும் 34 திரைப்படங்கள் முழுமையான விருதுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில் இதுவரை மூன்று திரைப் படங்கள் மட்டுமே ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரையே செய்யப்பட்டுள்ளது. அதாவது ஒஸ்கார் விருதுக்காக பரிசீலிக் கப்படுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளே செல்ல முடிந்தது. தமிழ் உட்பட மற்றைய இந்திய மொழிகளிலான படங்கள் விருதுக்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அவை பரிந்துரை அந்தஸ்துக்கும் செல்லவில்லை.




தமிழிலே இதுவரை 10 திரைப்படங்கள் ஒஸ்கார் விருதுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதில் எதுவும் முழுமையாக பரிந்துரைக்கப்படவில்லை. ஆயினும் சமர்ப்பிக்கப்பட ஏற்றுக்கொள்வதே இந்திய அளவில் ஒரு தேசிய அங்கீகாரமாக பேசப்படுவது முண்டு.

இதுவரை ஒஸ்கார் விருதுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் திரைப்படங்களின் விவரங்கள்:

| ஆண்டு (ஒஸ்கார் விருது) | திரைப்படம் | இயக்குனர் |
|---|---|---|
| 1969 (42வது) | தெய்வமகன் | அ.இ. திருலோகச் சந்திரன் |
| 1987 (60வது) | நாயகன் | மணிரத்தினம் |
| 1990 (63வது) | அஞ்சலி | மணிரத்தினம் |
| 1992 (65 வது) | தேவர் மகன் | பரதன் |
| 1995 (68வது) | குருதிப்புனல் | பி சி ஸ்ரீராம் |
| 1996 (69 வது) | இந்தியன் | எஸ் ஷங்கர் |
| 1998 (71வது) | ஜீன்ஸ் | எஸ் ஷங்கர் |
| 2000 (73 வது) | ஹே ராம் | கமல்ஹாசன் |
| 2016 (89 வது) | விசாரணை | வெற்றிமாறன் |
| 2021 (94வது) | கூழாங்கல் | பி. எஸ் வினோத் ராஜ் |

இந்த வகையில் 2023 ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருதுக்கு இந்தியாவில் இருந்து மூன்று சமர்ப்பிப்புகள் செய்யப்பட்டிருந்தன. இதில் இரண்டு விருதுகள் கிடைத்தன. ராஜமௌலியின் இயக்கத்திலான *RRR* திரைப்படத்தின் (தெலுங்குப் படம்) பாடலான 'நாட்டு நாட்டு' எனும் பாடல் சிறந்த இசையமைப்பு மற்றும் பாடல் வரிகளுக்காக விருதினை பெற்றுக் கொண்டது. விருதினை இயக்குனர் ராஜமௌலி, இசையமைப்பாளர் கீரவாணி மற்றும் பாடலை எழுதிய சந்திரபோஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மற்றைய விருதாக தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ் என்ற தமிழ் மொழியிலான ஆவணப்படம் வெற்றி பெற்றது. இத்திரைப்படத்தை இயக்கியவர் கார்த்திகி கொன்சல்வேஸ். தயாரித்தவர் குனீத் முன்கா. பெண்கள் இருவர் விருதினைப் பெற்றுக் கொண்டமை இந்நிகழ்வின் முக்கிய சிறப்பம்சம் ஆகும்.

தமிழ்திரைப்படம் எதுவும் முழுமையான ஒஸ்கார் விருதுக்கு தெரிவு செய்யப்படாத நிலையில் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்ட தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ் என்ற குறுஆவணப்படம் விருதினைப் பெறுவது தமிழர்களுக்கு பூரிப்பே.

இவ் ஆவணப்படம் நீலகிரி மாவட்டம் முதுமலை யானைகள் காப்பகத்தில் பராமரிப்பாளர்களாகப் பணியாற்றும் காட்டு நாயக்கர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பொம்மன், பெள்ளி தம்பதியைப் பற்றியது.

தாய்யானை மின்வேலியில் பட்டு இறந்து போய்விட மிக மோசமாக காயப்பட்ட நிலையில் காப்பகத்தினரும் அந்த யானைக் குட்டியைக் கைவிட்டு விடுகின்றனர். இந்த நிலையில் காப்பகத்தின் அனுமதியுடன் பொம்மன், பெள்ளி ஆகிய தம்பதியினர் அந்த யானை குட்டியை ரகு என்று பெயரிட்டு வளர்க்கின்றனர். ஒரு பெற்ற குழந்தையை வளர்ப்பது போல மிகுந்த ஈடுபாட்டுடன் யானை குட்டியை தாய் போன்ற கரிசனையுடன் வளர்ப்பது இந்த ஆவணப்படத்தின் கிளைமேக்ஸ். காட்டோடு சேர்ந்த மனித வாழ்விடம், இயற்கை பேணுதல், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை என்பன இக்கதைக்கு வலுச்சேர்க்கும் மேலதிக விடயங்கள் ஆகும்.

இப்படத்தின் கருப்பொருளுக்கு எதிராக யானைகளை மானுட சூழலில் பேணுதல் குறித்து பல எதிர் கருத்துக்களும் உள்ளன. யானைகளை பாதுகாப்பது என்பது அவற்றை மற்றைய யானைகளுடன் காட்டு வாழ்க்கைக்கு உட்படுத்துவதே எனும் கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

எதுஎப்படியோபடம்கலாபூர்வமாககட்டியமைக்கப்பட்டமையிலும் கதை சொல்லல் முறைமையிலும் உணர்வுகளை செறிவாக்கி நகர்த்தியமையாலும் வெற்றி கண்டுள்ளது எனலாம்.

பாரதப் பிரதமர் வரை இதனை பாராட்டியமையும் தமிழக முதல்வர் பணப்பரிசும் கேடயமும் வழங்கியமையும் இதன் தேசிய முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

# IMF சர்வதேச நாணய நிதியம்
# நெருக்கடியின் பின்னணியும் மீட்சியில் IMF இன் பங்கும்

அரச நிதித் துறையில் உள்ள கட்டமைப்பு ரீதியான பலவீனங்களே இலங்கையில் நீண்ட கால பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படைக் காரணமாகும்.

தொடர்ச்சியான வரிவருமான வீழ்ச்சி (நெருக்கடிக்கு முந்தைய இலங்கையானது உலகளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்திற்கு அமைய மிகக் குறைந்த வரி வருமானம் பெறும் நாடாகும்) மற்றும் மீண்டுவரும் செலவினங்கள் பல தசாப்தங்களாக அதிக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கு வழிவகுத்ததோடு இதன் விளைவாக கொவிட் தொற்றுநோய்க்கு முன்னர் அரச கடன் தொகை மொத்த தேசிய உற்பத்தியில் 90% வரை உயர்ந்துள்ளது.

* 2019 இன் பிற்பகுதியில் பொருத்தமற்ற சமயத்தில் வரிக் கொள்கை குறைப்பு மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் என்பன 2020/2021 இல் இரண்டு இலக்க வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கு வழிவகுத்தது, இதன் விளைவாக இலங்கையின் கடன் தரப்படுத்தல் முன்பிருந்த அளவுகளுக்கு அண்மித்த நிலைக்கு வீழ்ச்சி அடைய காரணமானது. இதன் காரணமாக, உலக மூலதனச் சந்தைக்கான பிரவேசத்தை நாடு இழந்தது. மூலதனச் சந்தை பிரவேசத்தை இழந்த போதிலும், இலங்கை தனது வெளிநாட்டுக் கடனை மீளச் செலுத்தலை தொடர்ந்து மேற்கொண்டது. அதன் வெளிநாட்டு நாணய கையிருப்பு விரைவாகக் குறைய காரணமானது.

* அந்நியச் செலாவணி கையிருப்பு குறைவால் ஏற்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை, 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பொதுமக்களின் எதிர்ப்புக்கு வழிவகுத்தது. கடன் மறுசீரமைப்பு மேற்கொண்டு முன்னொரு போதும் இல்லாத நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தைத் தொடங்கும் வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவைக் கொடுப்பனவுகளுக்கு ஒருதலைப்பட்ச நிறுத்தலை அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

* IMF ஆதரவு வழங்கும் நீடிக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்தின் ஊடாக 4 வருட காலத்தில் 2.9 பில்லியன் டொலர்கள் வழங்கும். இருப்பினும், IMF திட்டத்தின் நன்மதிப்பு அது வழங்கும் நிதியை விட மிக அதிகமாக இருக்கும். IMF திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள நம்பகத்தன்மை, அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் பொதுவாக உலகளாவிய சந்தையிலிருந்து ஏனைய நிதி ஆதாரங்களைக் கொண்டுவர உதவியாக அமையும்.

* இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பைக் கட்டியெழுப்பவும், பொருளாதாரத்திற்கு வெளி மற்றும் உள்ளக அவசர நிலைகளுக்கு உள்ளாவதை குறைக்கவும் இத்தகைய நிதியுதவி அவசியம். வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்புற நிதியை மீட்டெடுப்பதன் ஊடாக பணவீக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவும் மத்திய வங்கியின் நிதி நிதியியலின் தேவையையும் குறைக்கும்.

* ஏனைய நிதியுதவி நிறுவனங்களைப் போலவே, IMF இன் கடன் விதிகள், அது நிலைக்க முடியாததாகக் கருதப்படும் ஒரு நிறுவனத்திற்கு கடன் வழங்க அனுமதிக்காது. எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் வேலைத் திட்டமொன்று தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் இணைந்ததாக இலங்கையும் தனது கடனை மறுசீரமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

* கடன் மறுசீரமைக்கும் உலகளாவிய நிதிச் சந்தைகளுக்குள் பிரவேசிப்பதற்கும் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை மீள ஏற்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் இலங்கையின் கடன் தரப்படுத்தலை மேலும் நிலையான நிலைக்கு மீளமைப்பது மற்றொரு முக்கிய அம்சமாகும்.

* கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில், IMF இனால் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை (DSA) மேற்கொள்ளப்படுவதோடு இது எஞ்சியுள்ள கடனின் நிலைத்தன்மையை சீராக்க தேவையான கடன் குறைப்பின் அளவைக் கண்டறியும். இந்த கடன் குறைப்பு என்பது இலங்கையின் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கான கடனை குறைக்க அல்லது நீட்டிக்கவும் மற்றும் அரச வருவாயை அதிகரித்து தனது செலவை தொலைநோக்குடன் முகாமைத்துவம் செய்வதன் ஊடாக எதிர்கால வரவு செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையை குறைக்கவும் அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளின் கலவையாகும்.

* கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு சர்வதேச நாணய நிதிய சபை அங்கீகாரம் கிடைத்ததும், கடன் மறுசீரமைப்பு முறைகள் குறித்து கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தை ஆரம்பமாகும். நிதிக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையும் தொடர் செயற்பாடும் வலுவாகவும் தடையின்றியும் இருப்பதை இலங்கை உறுதி செய்ய வேண்டும்.

## அரசின் வருவாய் அதிகரிப்பு

* அரச நிதிய பலவீனமே நெருக்கடிக்கு மூல காரணமாக இருப்பதால், நிதிச் சீர்திருத்தங்கள் முழு மீட்சியின் முக்கிய அங்கமாகும். 2025 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.3% முதன்மை வரவு செலவுத்திட்ட மேலதிகத்தை (அரசு வருவாய் - வட்டி செலவுகள் தவிர்த்து அரச செலவு) அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.

* அரச நிதி ஒருங்கிணைப்பு முதன்மையாக வருவாய் அடிப்படையாகக் கொண்டது. 2022 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3% இலங்கையின் மொத்த அரசாங்க வருமானம் (நன்கொடைகள் உட்பட) உலகிலேயே மிகக் குறைவான அளவாக மாறியது. இந்தத் திட்டத்தின் கீழ், 2026 ஆம் ஆண்டுக்குள் அரசாங்க வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15% ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* குறிப்பாக முற்போக்கான வரி நடவடிக்கைகளின் மூலம் அரசாங்க வருவாயில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். நிறுவன ரீதியான மற்றும் தனிநபர் வருமான வரிகள் மற்றும் செல்வ வரிகள் போன்ற வரிகள் மிகவும் முற்போக்கானவை என்பதோடு வருமானம் அதிகமாக இருப்பதால் வரிச்சுமை அதிகமாக இருப்பதை உறுதி செய்கிறது. அதற்கமைய தனிநபர் வருமான வரி கீழ் வரும் வகையில் மாற்றப்பட்டது. வருடாந்த வருமானம்(ரூ) வரி விகித எல்லை 1,200,000 க்கு குறைவு 0% 1,200,000 முதல் 1,700,000 6% 1,700,000 முதல் 2,200,000 12% 2,200,000 முதல் 2,700,000 18% 2,700,000 முதல் 3,200,000 24% 3,200,000 முதல் 3,700,000 30% 3,700,000 இற்கு மேல் 36% ற் வ ட் டி வருமானம், வேலைவாய்ப்பு வருமானம் உள்ளிட்ட கொடுப்பனவுகளின் மீதான கட்டாய தடுத்து வைப்பு வரி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இலாபத்தின் மீதான இறுதி இலாபம் மீதான இறுதி தடுத்துவைப்பு வரி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் வரி வசூல் மற்றும் வரி செலுத்துவோரின் அடையாளத்தை மேம்படுத்தும்.

* துறைசார் விடுவிப்பற்ற உரிய நிறுவன வருமான வரி விகிதம் 30% ஆக உயர்த்தப்பட்டது. இந்த வரியானது லாபத்திற்கு மட்டுமே பொருந்தும், எனவே நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் இந்த கடினமான காலங்களில் கூடுதல் சுமையை சந்திக்காது.

* VAT விகிதங்கள் 8% இலிருந்து 15% ஆக அதிகரிக்கப்பட்டதோடு VAT பதிவு வரம்பு ரூ.300 மில்லியனில் இருந்து ரூ.80 மில்லியனாக குறைக்கப்பட்டது.

* ஆரம்ப கட்டமாக 2023 ஜனவரியில் மது மற்றும் புகையிலை மீதான உற்பத்தி வரி 20% அதிகரிக்கப்பட்டுள்ளது. 2023 ஜனவரியில் எரிபொருள் மீதான எரிபொருள் வரியும் அதிகரிக்கப்பட்டது. ஜனவரி 2024 முதல் பணவீக்கத்திற்கு அட்டவணைப்படுத்தப்பட்டது.

* VAT க்கு ஏற்கனவே உள்ள விடுவிப்புகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும். VAT வரி மீள செலுத்துதலை விரைவுபடுத்தவும் பின்னர் SVAT முறையை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

* 2025 ஆம் ஆண்டில், சொத்து வரி சீர்திருத்தம் செய்யும் வகையில் செல்வ வரி அறிமுகப்படுத்தப்படும். பரிசு/பரம்பரை வரி வடிவில் உரிய வரியில்லா கொடுப்பனவு மற்றும் குறைந்தபட்ச விலக்குகளுடன் செல்வ வரி அறிமுகப் படுத்தப்படும்.

* வேலைவாய்ப்பு வருமானம், வட்டி வருமானம் மற்றும் சேவைக் கொடுப்பனவுகள் மீதான கட்டாய தடுத்து வைப்பு வரி மூலம் வரி நிர்வாகம் மேலும் வலுப்படுத்தப்படும்.

* சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவியின் மூலம் பாரியளவில் வரி செலுத்துவோர் பிரிவின் கொள்ளளவு மேம்படுத்தப்படும்.

* விரிவாக்கப்பட்ட VAT வரி இலத்திரனியல் சமர்ப்பிப்பு, வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் கட்டமைப்மை (RAMIS) முழுமையாக செயல்படுத்துதல் உள்ளிட்ட டிஜிட்டல் மயமாக்கல். நடவடிக்கைகள் மற்றும் ஏனையவை வேகமாக கண்காணிக்கப்படும்.

* BOI மற்றும் SDP சட்டங்கள் மூலம் செயற்படுத்தப்பட்ட அனைத்து வரிச் செலவுகளும் (வரிச் சலுகை அல்லது வரி விடுமுறை காரணமாக வரி இழப்பு) ஆவணப்படுத்தப்படும்.

## செலவு முகாமைத்துவம்

* அரச நிதி ஒருங்கிணைப்பு முயற்சிகளின் முதன்மை மையமாக வருவாயை மேம்படுத்தும் அதே வேளையில், செலவு முகாமைத்துவமும் முக்கியமானது. இலங்கையில் அரச செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சராசரியாக 20% ஆகும்.

* ஊதியம் மற்றும் ஓய்வூதியக் குறைப்புகளைத் தவிர்ப்பதன் மூலம் அரசாங்க ஊதிய மசோதா மற்றும் ஓய்வூதிய செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான உத்திகள் உருவாக்கப்படும். இது முதன்மை வரவு செலவுத் திட்ட கையிருப்பு இலக்குகளுக்குள் பணவீக்கத்தை ஓரளவு கணக்கிடுவதற்கு சில அளவிலான ஊதியம் மற்றும் ஓய்வூதிய மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது.

* 2023 செப்டெம்பர் மாதத்துக்குள் அனைத்து செலவினப் பிரிவுகளுக்கும் ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் கட்டமைப்பை (ITMIS) விரிவுபடுத்துவதன் மூலம் செலவினங்களின் மீதான அர்ப்பணிப்புக் கட்டுப்பாடு பலப்படுத்தப்படும். மின் கொள்முதல் முறையும் விரிவுபடுத்தப்படும்.

* அரச முதலீடுகளின் செயல்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு மத்தியில் சுகாதாரம், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான செலவுகள் பாதுகாக்கப்பட்டு முடிந்தவரை மேம்படுத்தப்படும்.

## சமூக பாதுகாப்பு வலையமைப்பு

* இத்திட்டமானது ஒவ்வொரு ஆண்டும் அடையாளம் காணப்பட்ட சமூக பாதுகாப்பு வலையமைப்புகளுக்கான செலவுத் தளத்தை உள்ளடக்கப்படும். 2023 ஆம் ஆண்டிற்கான இந்த செலவுகளின் அளவு ரூ.187 பில்லியன் ஆகும், இது சமுர்த்தி, அங்கவீனர்கள், முதியோர் மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோயாளர்கள் (CKDU) தொடர்பான தற்போதைய பண பரிமாற்ற திட்டங்களுக்கு பொருந்தும்.

* நலன்புரிப் பயனாளிகளுக்கான தெரிவு அளவுகோல்கள் அரசியலற்றதாக்கப் படுவதையும், விடயதான அளவுகோல்களின் அடிப்படையில் இருப்பதை உறுதி செய்ய, நலன்புரி விநியோக முறை குறிப்பிடத்தக்க சீர்திருத்தத்திற்கு உட்படும். பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு விவரங்கள் சரிபார்க்கப்பட்டவுடன், புதிய திட்டம் ஜூன் 2023க்குள் செயல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.



* புதிய தெரிவு அளவுகோலின் கீழ் தகுதி பெறாத பயனாளிகளுக்கு ஜனவரி 2024 முதல் நலன்புரித் தொகை வழங்கப்பட மாட்டாது. அத்தகைய தகுதியற்ற நபர்களுக்கு சமுர்த்தி வாழ்வாதார உதவி போன்ற பணமில்லாத வழிகளில் உதவுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## SOE விலை நிர்ணயம்

* எரிபொருள் மற்றும் மின்சாரத்தின் தவறான விலை நிர்ணயம் காரணமாக முக்கிய அரச நிறுவனங்களில் (SOEs), இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் இலங்கை மின்சார சபை (CEB) ஆகியவற்றின் பெரும் நட்டத்துக்கு வழிவகுத்தது. இந்த நட்டத்தை ஈடுசெய்ய வரி செலுத்துவோர் மற்றும் அரசுக்கு சொந்தமான வங்கிகளால் நிதி வழங்கப்படுகின்றன. அவை இப்போது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் கடன்கள் மூலம் எழும் அபாயங்களை எதிர்கொள்கின்றன. பொதுவாக இலங்கையின் வருடாந்த இறக்குமதி செலவில் 20% மான எரிபொருளுக்கு நிலவுகின்ற கேள்வியைக் கட்டுப்படுத்த தவறியதால், எரிபொருள் மற்றும் மின்சாரத்தை தவறாக விலை நிர்ணயம் செய்வது கொடுப்பனவு சமநிலையில் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

* இந்த வேலைத் திட்டத்தின் கீழ் எரிபொருள் விலைகள் அரசியல் மயமாக்கப்படுவது நிறுத்தப்படும். 2018 இன் விலை சூத்திரத்தின் மூலம் விலைகள் தீர்மானிக்கப்படுவதுடன் செலவுகளை மீட்டெடுப்பதை உறுதி செய்வதற்காக ஒரு மாதத்திற்கு ஒருமுறை தயாரிக்கப்படும்.

* எதிர்கால செலவுகளின் மதிப்பீட்டின் அடிப்படையில் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒருமுறை விலை மாற்றங்களுடன் செலவினங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மின்சார விலைகள் தயாரிக்கப்படும். 2022 ஆகஸ்ட் (75% அதிகரிப்பு) மற்றும் பெப்ரவரி 2023 (66% அதிகரிப்பு) ஆகிய இரண்டு விலை பொருத்தப்பாடுகள், தேவையான ஜனவரி பொருத்தப்பாட்டுடன் 2023 பெப்ரவரி மாதத்தின் தயாரிப்பு தாமதித்ததனால் ஓரளவு பற்றாக்குறை நிலை ஏற்பட்டது. முன்னோக்கிச் செல்லும்போது, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் செலவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் விலைகள் மாற்றியமைக்கப்படும்.

* 2023 டிசம்பர் மாதத்துக்குள், மின்சாரச் செலவை நிர்ணயிப்பதற்கான அடிப்படையாக மாறும் வகையில் மொத்த விநியோகப் பரிவர்த்தனை கணக்கியல் முறை மேம்படுத்தப்படும்.

* IMF வேலைத்திட்டத்திற்கு இடையில், எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்கான செலவுகள் மற்றும் சில்லறை விலை ஆகியவற்றுக்கு இடையே சில வேறுபாடுகள், இல்லையெனில் CPC மற்றும் CEB க்கு தொடர்ந்து நட்டம் ஏற்படுமாயின், அத்தகைய நட்டங்கள் ஏற்படாமல் இருப்பதை தடுப்பதற்கு வரவு செலவுத் திட்ட பரிமாற்றங்கள் மூலம் நட்ட ஈடு வழங்கப்படும்.

* பெரும் நட்டத்தில் இயங்கும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் இருப்புநிலைகள் மறுசீரமைக்கப்படும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் இருப்பு நிலையில் இறையாண்மை அந்நியச் செலாவணி கடன்கள் அரசாங்கத்திற்கு பொறுப்பேற்கப்பட்டன.

* அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் புதிய கடன்கள் கடுமையான விதிகளுக்கு உட்பட்டதாக இருக்கும். இருப்புநிலைக் குறிப்பின் ஆரோக்கியம் மற்றும் நிதி அடிப்படையில் வெளிநாட்டு நாணயக் கடன் பெறுதல் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு அரசாங்க உத்தரவாதங்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட சட்டவிதிகள் இதில் அடங்கும்.

## கடன் முகாமைத்துவம்

* உலகளாவிய சிறந்த நடைமுறைகளின் படி ஒரு சுதந்திரமான அரச கடன் முகாமைத்துவ நிறுவனம் ஒன்று நிறுவப்படும்.

* இந்த நிறுவனத்துக்கு கடன் முகாமைத்துவம் தொடர்பான அனைத்து பொறுப்பும் வழங்கப்படுவதோடு, சுயமான நிர்வாக கட்டமைப்புடன் நிதி அமைச்சுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

## விலை நிலைத்தன்மை மற்றும் நிதிக் கொள்கை

* 2022 இல் பணவீக்கம் 70%ஐ நெருங்கும் நிலையில் விலை ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதே திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஏப்ரல் 2022 (700 அடிப்படைப் புள்ளிகள்), ஜூலை 2022 (100 அடிப்படைப் புள்ளிகள்) மற்றும் 2023 இல் (100 அடிப்படைப் புள்ளிகள்) பணவீக்கத்தை 4-6% என்ற இலக்கு நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் கொள்கை வட்டி விகிதங்கள் உயர்த்தப்பட்டன. பணவீக்கம் உச்சத்தில் இருந்து கணிசமான அளவு குறைந்துள்ளதுடன், மேலும் 2023 இன் இரண்டாம் பகுதியில் ஒற்றை இலக்க நிலைக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* வேலைத்திட்ட காலத்தில் நிதி முகாமைத்துவம் (வரவுசெலவுத் திட்டப் பற்றாக் குறைக்கு மத்திய வங்கியின் நேரடி நிதியியல்) படிப்படியாக நீக்கப்படும். இதற்காக திறைசேரிக்கு அதன் கடன் தேவைகளை கணிசமாகக் குறைக்கவும், பற்றாக்குறையை ஈடுகட்ட சந்தை நிதி முகாமையில் தங்கியிருக்க வேண்டியிருக்கும்.

* சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் ஏனைய தரப்புகளிடமிருந்து வெளிநாட்டு நிதியுதவிக்கான வழியைத் திறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது பண நிதியியலை அகற்றுவதற்கான செயல்முறையை எளிதாக்கும். இருப்பினும், வெளிநாட்டு நிதியளிப்பில் குறைபாடுகள் இருந்தால், நிதியளிப்பைக் குறைக்க இலக்குகள் தயாரிக்கப்படும்.

* ஒரு புதிய மத்திய வங்கிச் சட்டம் மூலம் நிதி நிதியயலை நீக்குவதற்கு அவசியமான பொருளாதாரத்தை சட்டப்பூர்வ அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும். புதிய அரசியலமைப்பு மூலம் மேம்படுத்தப்பட்ட மத்திய வங்கி சுதந்திரம் மற்றும் பணவீக்கத்தை இலக்குமயப்படுத்துவதற்கு சட்டக் கட்டமைப்பையும் வழங்கும். மத்திய வங்கியின் சுதந்திரம் மற்றும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதன் தேவைக்கும் இடையில் பொருத்தமான சமநிலைக்கும் சட்டம் இயற்றப்படும்.

* தற்போதுள்ள அந்நியச்செலாவணி கட்டுப்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் படிப்படியாக அகற்றப்பட்டு, அந்நியச் செலாவணி சந்தையும், சந்தை அடிப்படையில் செயல்பட வழியேற்படும். அந்நிய செலாவணி சந்தை பணப்புழக்கத்தின் விளைவாக, மத்திய வங்கி ஏற்கனவே சந்தை வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டாய சரணடைதல் தேவைகளை நீக்கியுள்ளது.

* இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவுவதனால், அந்நிய செலாவணி வரவுகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதால், திட்டத்தின் குறிப்பிட்ட இலக்குகளுடன் அந்நிய செலாவணிக் கையிருப்பைக் கட்டியெழுப்பும் நோக்கில் மத்திய வங்கி வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்யவும் எதிர்பார்க்கிறது.

## நிதித் துறையின் ஸ்திரத்தன்மை

* மோசமான பொருளாதார நிலைமைகள் மற்றும் இறையாண்மை கடன் மறுசீரமைப்பு ஆகியவை வங்கி மற்றும் நிதிக் கட்டமைப்பு மீதான அழுத்தத்தை அதிகரிக்கின்றன.

இந்த சூழலில், கடினமான காலகட்டத்தில் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்காக நிதிக் கட்டமைப்பில் போதுமான மூலதனமாக்கல் மற்றும் பணப்புழக்கத்திலிருந்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசாங்கம் அதிக முன்னுரிமை அளிக்கிறது.

* தற்போதுள்ள அபாயங்களை மதிப்பிடுவதற்கு தற்போது பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதே போன்று, கட்டமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகளின் சொத்துத் தரம் மற்றும் இத்தகைய அபாயங்களை செயற்திறனுடன் குறைப்பதற்கு இந்த நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்.

* இந்த சவாலான காலகட்டத்தில் உயர்ந்த கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு உள்ளது. அத்தகைய தேவைகளுக்கு வசதிகளை வழங்குவதற்கு வங்கிச் சட்டம் திருத்தப்பட்டும். மத்திய வங்கியின் தீர்மான அதிகாரம், வைப்புத் தொகை காப்புறுதி கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறை தரநிலைகளை மேம்படுத்த வங்கிச் சட்டத்தில் மிக முக்கியமான திருத்தங்கள் பின்னர் அறிமுகப்படுத்தப்படும்.

* ஒழுங்குமுறை தரநிலைகள் மற்றும் நிர்வாக முறைகள் தனியார் வங்கிகளுக்கு இணையாக மேம்படுத்துவதற்கு, குறிப்பாக அரச வங்கிகளுக்கு அவசியம் என்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். சிறப்பான அபாய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகளை உறுதி செய்வதற்காக அரச வங்கிகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு இடையிலான உறவு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

## நிர்வாகம்

* இலங்கை பொருளாதாரம் குறித்து நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இந்த வேலைத் திட்டம் உதவுவதுடன் உள்நாட்டு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஐ.எம்.எப். இனால் நிர்வாக சமிஞ்சை குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பிக்கப்படும்.

ஊழலைத் தடுப்பதற்காக இலங்கை நிர்வாகத்தின், நிறுவனக் கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை இதன் மூலம் அடையாளம் காணப்படும்.

* ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு இணையாக, ஊழலுக்கு எதிரான சட்டங்கள் தயாரிக்கப்படும். இதன்மூலம் சொத்து அறிக்கையிடல் மற்றும் விசாரணைகளின் சுயாதீனத் தன்மை பலப்படுத்தப்படும்.

* சொத்து மீட்பு விதிகளும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் சட்டமியற்றும் கட்டமைப்பில் சேர்க்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

* வலுவான நிதி விதிகளை உள்ளடக்கிய புதிய பொது நிதி மேலாண்மை சட்டம் உருவாக்கப்படுகிறது.

* இறுக்கமான நிதி மேலாண்மை மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்தும் நடுத்தர கால நிதி கட்டமைப்பு உட்பட, நிதி முன்னறிவிப்பின் துல்லியத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

* அனைத்து நிதி தரவுகளின் வெளிப்படைத்தன்மை மேம்படுத்தப்படும். இலங்கையின் பொதுக்கடன் பற்றிய விரிவான தரவுகள் அடங்கிய காலாண்டு கடன் அறிக்கையை அரசாங்கம் வெளியிடப்படும்.

* BOI வரிச் சலுகைகளைப் பெறும் நிறுவனங்கள் / சலுகைக் காலம் வரிச் சலுகை உரிமங்களைப் பெறும் நபர்கள் அறிவிக்கப்படுவார்கள். குறிப்பிடத்தக்க பொது கொள்முதல் ஒப்பந்தங்கள் அறிவிக்கப்படும்.


* SOE ஐ மேம்படுத்தப்படுவதுடன் ஒகஜகள்) மூலம் அறிவிக்கப்படும் நிர்வாகத்தின் கருத்துக்கள் தொடர்பான அறிக்கைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...

எழுத்து முத்து

# பன்முக ஆளுமை அண்ணாவியார் கணபதிப்பிள்ளை





**கோவிலூர் செல்வராஜன்**

முருகப்பன் கணபதிப்பிள்ளை என்ற பெயர் கொண்ட இவர் வேலாயுதர் முருகப்பன் என்னும் ஒரு விவசாயின் மகன். இவரது தாயார் பெயர் வள்ளியம்மை முருகப்பன் ஆவார். இவர் 20.11.1925 அன்று பிறந்தார்.

இவரது பிள்ளைகளாக ஞானராணி, நீதிராசா, மதிபாஸ்கரன், தயாநிதி, கலாமதி, நிமலலோஜினி என்று ஆறு பிள்ளைகள் உள்ளனர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கோட்டை கல்லாறு மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் கற்றார் (தற்போது கண்ணகி வித்தியாலயம்) பின்னர் கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்கல்வி கற்றார்.

ஆரம்பத்தில் இவர் தனது மாமனாரின் தச்சுத் தொழில் வேலையை செய்தார். அதன் பின் கல்லோயா வீட்டுத் திட்ட தச்சு தொழில் மேற்பார்வையாளர் வேலை, அதன்பின் காரைதீவில் கயிற்று வேலை ஆசிரியராகவும், கிளிவெட்டி தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியையும் செய்தார். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் (1961-62) ஆசிரியர் பயிற்சி பெற்றார். அதன் பின்னர் வெளிமடை, லுணுகலை, மகளூர், பெரிய போரதீவு, கோட்டைக் கல்லாறு, பெரிய கல்லாறு ஆகிய இடங்களில் ஆசிரியராக பணிபுரிந்தார்.

இவர் பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே கலையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பாடசாலை விழாக்களில் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி பல நிகழ்ச்சிகளை செய்தார். இவர் நாட்டுக் கூத்துக்கள், நாடகங்கள், வில்லிசைகள், கரகாட்டம், கும்மி, கோலாட்டம், கிராமிய நடனங்கள் என்று பல கலை வடிவங்களை எழுதி அவற்றை நெறிப்படுத்தி உள்ளார்.

ஒரு கவிஞராகவும் இருந்து மரபுக் கவிதை புதுக்கவிதை என்று பல கவிதைகளை எழுதியுள்ளார். நாட்டுக் கூத்தில் ஆர்வம் கொண்டு பல கூத்துக்களை எழுதி பல கூத்து கலைஞர்களை ஆட வைத்ததுடன் அண்ணாவியாராக இருந்து அவற்றை இயக்கியும் உள்ளார்.



'ஓடிப் போனவன்', 'சூறாவளி', 'கடுக்கன்கந்தர்', 'நந்தாவதிதிருமணம்' போன்ற கூத்துக்கள் பல தடவை இவரால் மேடையேற்றப்பட்டுள்ளன. 'நந்தாவதி திருமணம்' மட்டு. மாவட்டத்தில் 23 தடவைகள் மேடை ஏறி உள்ளது. இந்த கூத்து இறுதியாக 1969 ஆம் ஆண்டு திருக்கோவில் ஆலயத்தில் நடைபெற்றது.

இவர்எழுதி இயக்கிய 'கண்ணகியம்மன் கரகம்' கலை வடிவம் ஐந்து தடவை மேடை ஏறி உள்ளது. இவர் எழுதி இயக்கிய 'எரியுண்ட மதுரை' என்ற நாடகம் இரண்டு தடவைகள் மேடை ஏறி உள்ளது.

இவருக்கு கலாபூஷணம், நாட்டுக் கூத்து அண்ணாவியார் என்ற அரச விருதுகள் கிடைத்துள்ளன. இவர் 'பராசக்தி பாமாலை' என்ற நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் கோட்டைக் கல்லாறு ஆலயங்களில் வண்ணக்கராக இருந்துள்ளார். கண்ணகை அம்மன் புதிய ஆலய நிறைவு பணிக்கும் கும்பாபிஷேகத்திற்கும் பெரும் பணியாற்றியுள்ளார்.

கவுடா தீவு வடகண்ட குழு செயலாளராக பத்து வருடங்கள் பணியாற்றியுள்ளார். கோட்டைக் கல்லாறு தெற்கு கூட்டுறவு சங்க செயலாளராக 12 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். கோட்டை கல்லாறு சிவராத்திரி குழு ஆரம்ப கர்த்தாவும் தலைவருமாவார்.

பட்டிருப்பு வட்டார கலாச்சார பேரவையில் தலைவராகவும், உப தலைவராகவும், உப செயலாளராகவும் இருந்திருக்கிறார். கோட்டை கல்லாறு



தென்சேரிவார வெற்றி விழா குழு தலைவராகவும் கோட்டைக் கல்லாறு தெற்கு சன சமூக தலைவர், செயலாளராகவும், கோட்டைக் கல்லாறு கரப்பந்தாட்ட குழு தலைவராகவும் இருந்திருக்கிறார்.

பன்முக ஆளுமை கொண்ட இவர் 2010 ஆம் ஆண்டு தை மாதம் மறைந்துள்ளார். கோட்டைக்கல்லாறு அம்பாரையடி சன சமூக நிலைய வாசிகசாலைக்கு தனது சொந்த நிலத்தை இலவசமாக இவர் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# வெடுக்குநாறிமலை விக்கிரகங்கள் உடைப்பு: வவுனியாவில் பாரிய கண்டன ஆர்ப்பாட்டம்

## தொல்பொருள் திணைக்கள அலுவலகம் முற்றுகை : வெளியேறுமாறு கோஷம்




வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்தும், நீதி கோரியும் வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இடம்பெற்றது.

ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இன்று (30) காலை 10 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் தேங்காய் உடைத்து வழிபட்ட பின் ஆரம்பமாகிய பேரணி மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து, அங்கிருந்து பசார் வீதி ஊடாக ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி ஊடாக மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் உட்பட ஏனைய விக்கிரகங்களும் கடந்த வாரம் உடைத்தழிக்கப்பட்டிருந்தமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

குறித்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிப்பதுடன், இந்த விசமச் செயலை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி குறித்த பேரணி இடம்பெற்றது.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வெடுக்கு நாறிமலை மீதான தாக்குதல் கௌதம புத்தரின் ஆன்மிகத் தோல்வி, ஈழத்தமிழனை வேரறுக்க நினைக்காதே, வெடுக்குநாறி எங்களின் இடம், மத சுதந்திரத்தை தடுக்காதே, தொல்பொருள் திணைக்களமே வெளியேறுய் போன்ற கோசங்களை எழுப்பியிருந்ததுடன், பதாதைளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்ட பேரணியாக சென்ற மக்கள் வைத்தியசாலை சுற்றுவட்ட பகுதியில் அமைந்திருந்த தொல்பொருள் திணைக்கள அலுவலக வளாகத்திற்குள் சென்று வாயிலை மறித்து தொல்பொருள் திணைக்களமே வெளியேறு என கோசமிட்டனர். சுமார் 15 நிமிடங்கள் வரை குறித்த வாயிலை முற்றுகையிட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து வெளியேறி மாவட்ட செயலகம் சென்றிருந்தனர்.

பகுதியில் அமைந்திருந்த தொல்பொருள் திணைக்கள அலுவலக வளாகத்திற்குள் சென்று வாயிலை மறித்து தொல்பொருள் திணைக்களமே வெளியேறு என கோசமிட்டனர். சுமார் 15 நிமிடங்கள் வரை குறித்த வாயிலை முற்றுகையிட்ட மக்கள் பின்னர் அங்கிருந்து வெளியேறி மாவட்ட செயலகம் சென்றிருந்தனர்.

மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவிடமும், ஜனாதிபதிக்கான மகஜர் ஜனாதிபதியின் வடக்கிற்கான இணைப்பாளரும், மேலதிக செயலாளருமான ஈ.இளங்கோவனிடமும் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களும் மகஜர் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இது குறித்து ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபயின் மேலதிக செயலாளர் மற்றும் அரச அதிபர் ஆகியோர் இணைந்து வாக்குறுதி வழங்கியதையடுத்து போராட்டக்காரர்கள் அங்கிருந்து சென்றனர்.

குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், செ.கயேந்திரன், தமிழரசுகட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சமயப் பெரியோர்கள், சமூக ஆர்வலர்கள், பல்கலைகழக மாணவர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், காணாமல் போன உறவுகளின் சங்கத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# பொடியப்பு பியசேன

## மக்கள் தொண்டில் ஒரு வெற்றிடம்

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்? எனும் புரட்சித் தலைவரின் பாடலுக்கு பொருத்தமான ஒருவரை அம்பாரை மாவட்டம் இழந்திருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகராய் இருந்து, அவர் வழி சென்று மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் அரசியலில் நுழைந்தவர், பொடியப்பு பியசேன.

பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியிலும் தன்னால் முடிந்தவற்றை மக்களுக்கு பெற்றுக் கொடுத்து மரண வீடுகள் எங்கும் தன்னால் முடிந்த உதவிகளை செய்து மயானங்களையும் தினம்தோறும் சுத்தம் செய்து வந்த இவர், அங்கு செல்லும் போதே தன் இன்னுயிரை இழந்தார் என்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

**பொடியப்பு பியனே என்றும் மறக்க முடியாத மனிதரே.**

ஆம். கடந்த 17ஆம் திகதி அதிகாலை அந்த துயரச்செய்தி தீயாய் பரவியபோது அவரை வெறுத்தவர்கள் கூட ஒரு கணம் மனம் உடைந்துதான் போனார்கள்.

தன் வாழ்நாள் பணியாக எதனை நினைத்துக் கொண்டிருந்தாரோ அன்றும் அதே பணிக்காக மயானம் நோக்கி தன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மறுநாள் தன்னை நால்வர் தூக்கி செல்லப் போகின்றனர் என்பதை நினைத்திருக்கவும் மாட்டார். இவ்வளவுதான் இந்த மனித வாழ்க்கை என்பதையும் எண்ணியிருக்கவும் மாட்டார்.

கடந்த 17 ஆம் திகதி அதிகாலை தன் குடும்பத்தார் தூக்கத்தில் இருந்து கண்விழிக்கும் முன்னர் உலகை விட்டு பிரிந்தார். இன்னுமொருவரின் மூன்றாம் நாள் பால் வார்க்கும் கிரியைகளில் கலந்து கொள்ளவும் அங்கு தேவாரம் பாடுவதற்காகவும் அக்குடும்பத்தின் அழைப்பின் பேரில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சிரமதானம் செய்வதற்காக மண்வெண்டி ஒன்றினையும் எடுத்துச் சென்றுள்ளார்.

வீதியை கடந்து மயானத்தை நெருங்குகையில் தனியார் பேருந்து மூலமாக வந்த காலனவன் பெரும் விபத்தை ஏற்படுத்தி விட்டான். விபத்தில் பலத்த காயமடைந்த அவரின் ஆன்மா அவ்விடத்தை விட்டு அகன்றாலும் வைத்திய சிகிச்சை மூலம் உயிரை காப்பாற்றிவிடலாம் எனும் போராட்டத்தில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் ஈடுபட்டனர். மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கும் மாற்றம் செய்தனர். ஆனாலும் இறைவனின் முடிவை மனிதன் மாற்ற முடியாது என்பதற்கு இணங்க அவரின் உயிர் பிரிந்தது என வைத்தியசாலை தகவல்கள் வெளிவந்தன.

அதுவரை பெரும் நம்பிக்கையோடு காத்திருந்த அவரது குடும்பத்தினதும் உறவுகளதும் கிராம மக்களதும் பிரார்த்தனை தவிடு பொடியாகியது.

இறுதிக் கிரியைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. அலை அலையாக மக்கள் கூட்டம் அவரது வீட்டை சூழ்ந்தது. அப்போதே பலருக்கு புரிந்தது அவரது சேவைகளின் பெருமை. அரசியல்வாதிகள் தொடக்கம் அரச உயர் அதிகாரிகள் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலயங்கள், விளையாட்டுக் கழகங்கள், நலன்விரும்பிகள், பொது மக்கள் என இறுதிக் கிரியைகளில் பங்கேற்ற பெருந்தொகையானவர்கள் அரசியல் மற்றும் பல்வேறு விமர்சனங்களுக்கு அப்பால் அவரது மனித நேயத்தை பற்றி பேசிக்கொண்டனர்.

அவரை ஏதோ ஒரு வகையில் வெறுத்தவர்கள் கூட அவரது இழப்பு தொடர்பில் கவலை அடைந்தனர். அவரது ஆன்மா ஈடேற்றத்திற்காக பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

1961.04.03 ஆம் திகதி பொடியப்பு பியசேன இப்பூவுலகில் பொடியப்பு சின்னம்மா ஆகியோரின் இளைய மகனாக பிறந்தார். இளமை முதல் சமூகப் பணிகளில் அதிக அக்கறை கொண்ட அவர் உயர்தரம் வரை அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண மிசன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றார். இல்லறத்தில் இணைந்து விஜயகுமாரியை கரம்பிடித்து தன் பின்னால் தன்பணியை கொண்டு செல்ல கிருத்திகன் எனும் ஆண் மகன் ஒருவரையும் தவேதனா, சரஸ்வதியா, பவித்திரா ஆகிய பெண் பிள்ளைகள் மூவரையும் பெற்றெடுத்தார்.

தனது சமூக சேவை மூலம் பல்வேறு உதவிகளை புரிந்த அவர் உதவும் கரங்கள் அமைப்பையும் ஸ்தாபித்தார். கல்வி வளர்ச்சியே ஒரு சமூகத்தின் நிரந்தரமான வளர்ச்சி என்பதில் உறுதியாக இருந்தார் இதன் காரணமாக பாடசாலைகள் தோறும் சென்று மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். வீதியில் காணும் பிள்ளைகளுக்கு எல்லாம் பேனா, பென்சில், இனிப்பு பண்டங்கள் என முடிந்ததை கொடுத்தார். வாய்ப்பாட்டு அட்டைகளை கொடுத்து மனனம் செய்ய ஊக்குவித்தார். அம்பாரை மாவட்டத்தில் நடைபெறும் மரண நிகழ்வுகளில் கலந்து கொள்வதையும் மறுநாளே அவ்வீட்டிற்கு சென்று துக்கம் விசாரிப்பதையும் தன்னால் முடிந்த உணவு பொதிகளை வழங்குவதையும் வழமையாக்கிக் கொண்டார்.

இதன் காரணமாக மாணவர்கள் மனதிலும் மக்களின் நெஞ்சங்களிலும் நீங்கா இடம்பிடித்தார். இதுவே அவரது அரசியல் வாழ்க்கைக்கு அத்திவராக்கல்லாய் அமைந்தது. பிரதேச சபை தேர்தலில் பல இழுபறிக்கு பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினூடாக காலடி எடுத்து வைத்தார். தவிசாளராகவும் பணியேற்றார். கதிரைகளை சூடாக்குவதைவிட வீதிகள் தோறும் அலைந்து குப்பை அள்ளும் பணி கூட செவ்வனே இடம்பெறுகின்றதா? என அவதானித்தார். தனது சமூகப் பணியை விரிவு படுத்தினார்.

இதுவே அவரது பாராளுமன்ற நுழைவுக்கு காரணமாக அமைந்தது. 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினூடாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் களம் இறக்கப்பட்டார். அத்தேர்தலிலும் தனது சாதுர்யத்தால் பல தடைகளை தாண்டி 11,139 வாக்குகளை பெற்று யாரும் எதிர்பாரா வகையில் வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவர் தன்னால் ஒன்றும் செய்யமுடியவில்லையே என எண்ணி கட்சி மாறி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இணைந்தார். அதன் மூலம் பெறப்பட்ட பல வேலைத்திட்டங்களை அம்பாரை மாவட்டம் முழுவதும் அள்ளிக் கொடுத்தார். ஆனாலும் நேர்த்தியான வழிகாட்டல் இன்றி மக்களின் வெறுப்பிற்கும் கோபத்திற்கும் ஆளாகினார். அதை அவர் அப்போது புரிந்து கொள்ளாவிட்டாலும் பின்னாளில் அறிந்து கொண்டார்.

இதன் காரணமாக 2016 இல் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட்டு 4901 வாக்குகளை பெற்று தோல்வியை தழுவினார். சட்டச் சிக்கல் காரணமாக சில காலம் சிறைக்கும் சென்று வந்தார். ஆனாலும் அவர் ஓயவில்லை. தன் மகனை அரசியல் வாரிசாக கொண்டு செல்ல அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டார்.

எவ்வாறிருந்தபோதும் அவரது சமூகப் பணி இறுதி மூச்சு வரை மாறவில்லை. மக்கள் நலன் சார்ந்த சமூக தொண்டில் பியசேனவின் இடம் வெற்றிடமாகவே தொடர்கிறது....

13 ஆம் பக்க தொடர்ச்சி...

## IMF சர்வதேச நாணய நிதியம்

* SOE குழு உறுப்பினர்களுக்கான தேர்வு செயல்முறை தரம் மற்றும் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்த மதிப்பாய்வு செய்யப்படுகிறது. வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக 52 முக்கிய SOEகளின் வருடாந்த அறிக்கைகள் துரிதமாக வெளியிடப் படுகின்றன. வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு

* ஸ்திரத்தன்மைக்கு உடனடி முன்னுரிமை என்றாலும், IMF திட்டமானது நடுத்தர மற்றும் நீண்ட கால வளர்ச்சியை உயர்த்துவதற்கான சீர்திருத்தங்களையும் உள்ளடக்கும். வர்த்தக சீர்திருத்தங்கள் தொடர்பான நடவடிக்கைகள் இதில் அடங்கும். (கட்டணங்களுக்கான போட்டியை படிப்படியாக நீக்குதல்) பெண் தொழிலாளர் பங்களிப்பு மற்றும் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், ஆற்றல் துறை சீர்திருத்தங்கள் உற்பத்தி செலவுகளை குறைக்க மற்றும் திறமையின்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல்.

### முடிவுரைகள் மற்றும் முன்னோக்கி செல்லும் வழி

* IMF& EFF திட்டத்தின் கீழ், பிரசத்தமற்ற ஆனால் தேவையான சீர்திருத்த நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், இந்த மறு சீரமைப்புக்கள் இன்றியமையாதது என்ற போதிலும் இவற்றை பாதகமான சமூக மற்றும் நிலையில்லா கொள்கைகள் மீண்டும் உருவாக்கப்படுவதைத் தடுப்பதன் மூலம் நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்தல்.

* 2022 இடைக்கால பட்ஜெட் மற்றும் 2023 ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்டு, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய கட்டமைப்பு சீர்திருத்தங்கள் EFF திட்டத்தின் கீழ் கொள்கை செயற்பாடுகளை வலுப்படுத்தும்.

* மேலும், IMF&EFF திட்டத்திற்கு அப்பால் சென்ற, பலதரப்பு குறித்து விரிவான, பரந்துபட்ட மறுசீரமைப்புக்கள், நிலையான மீட்சிக்கும், வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கும் பொருளாதாரத்தைத் திறக்கவும், டிஜிட்டல் மயமாக்கவும் அரசாங்கத்தினால் நடுத்தர முதல் நீண்ட கால பாதையை துரிதமாக கொண்டுவருதல்.

* எதிர்பார்த்துள்ள இலக்குகளை அடைவதற்கான இந்த தொடர்ச்சியான முயற்சியில் அனைத்து பங்குதாரர்களின் ஆதரவும் பங்களிப்பும் இன்றியமையாததாக இருக்கும்



# வாணனிடம் கேளுங்கள்

## கேள்வியும் பதில்களும்

சந்திரசேகரன்,
ஆலையடி வேம்பு,
அக்கரைப்பற்று-01

**கேள்வி :** நீங்கள் கடைசியாக ஆனந்தக் கண்ணீர் விட்ட தருணம் எது?




**பதில் :** ஐ.எம்.எஃப் கடன் வழங்கிய போது நம் நாட்டில் சிலர் வெடி சுட்டு, பாற்சோறு பகிர்ந்து அந்த சந்தோஷத்தைக் கொண்டாடினார்களே, அப்போது.

*****

சினிமா பித்தன்,
ஜோஜ் ஆர். டி சில்வா மாவத்த,
கொழும்பு 13.

**கேள்வி :** இளையராஜா கிறிஸ்தவ மதம் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளைக் கூறியிருக்கிறாரே. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**பதில் :** இளையராஜாவின் இசை சிறப்பு. மைக் முன் பேசினால் வெறுப்பு !

*****

ஐயாக்கண்ணு,
செட்டியார் தெரு,
கொழும்பு 12.

**கேள்வி :** முக்கனிகளாக மா, பலா, வாழை என்று எதை வைத்து முடிவு செய்தார்கள் ?



**பதில் :** நம் மண்ணில் கைக்கெட்டிய தூரத்தில் விளைந்திருக்க வேண்டும். விலை ஓரளவு கட்டுப்படியாக வேண்டும். நாவுக்கு சுவையாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்த விஷயமாக அது இருக்கலாம்.

*****

டெனிஷ்கா
பிரதான வீதி
பாண்டிருப்பு

**கேள்வி :** நடிகை திரிஷாவுக்கு எப்போது திருமணம் நடக்கும் ?



**பதில் :** நடிகர் சிம்புவுக்குத் திருமணம் நடக்கும் அதே ஆண்டில்.

*****

எம்.எல்.எம்.ஆதம்பாவா
கல்முனை குடி


**கேள்வி :** கல்முனை மாநகராட்சியில் பெரும் நிதி மோசடி நடந்திருப்பதாக செய்திகள் வெளிவருகின்றனவே?

**பதில் :** கவலை வேண்டாம். மக்கள் அதை மறந்து விடுவார்கள். கொன்றால் பாவம். தின்றால் போச்சு !

*****

காந்திமதி,
வட்டவிதான வீதி
கல்முனை 2

**கேள்வி :** அண்மையில் வெளியான நல்ல திரைப்படங்களை சிபாரிசு பண்ண முடியுமா?




**பதில் :** தமிழில் படுமொக்கையான திரைப்படங்களே வெளியாகின்றன. சற்று வித்தியாசமான படங்களாக ‘தலைக் கூத்தல்’, ‘டாடா’ ஆகியவற்றை சொல்ல லாம். சின்ன விஷயங்களையும் கூட சிறப்பான திரைக்கதை, பொருத்தமான நடிகர்களின் நடிப்பு என்பவற்றால் மலையாளிகள் அழகு படுத்தி விடுகிறார் கள். அப்படி வந்த படங்கள் ‘நண்பகல் நேரத்து மயக்கம்’ ‘இரட்டா’ (*iratta*), ஜெய ஜெய ஹே, இந்தப் படங்கள் தமிழிலும் கிடைக்கின்றன. காந்தாரா கன்னடப் படமும் பார்க்க வேண்டிய ஒன்று.

நீங்கள் வெப் சீரீஸ் பிரியரானால் *"Farzi"*, *"The Night Manager"*, *"Breath into the shadow"*, *"Rana Naidu"* என்பவற்றைப் பாருங்கள்.

*****

கொழும்பு
மாளிகாவத்தை,
இக்ரம்.

**கேள்வி :** அறகலைக்கும் அறகலக காரர்களுக்கும் என்ன நடந்தது...? மீண்டும் களம் இறங்குவார்களா?...




**பதில் :** அறப்படித்து கூழ் பானைக்குள் விழுந்த கதைதான்... துண்ட காணோம் துணிய காணோம் என்று ஓடினார் கோட் டா. அது மட்டும் தான் நடந்தது. ரணிலின் கோல்பேஸ் ஆபரேஷன் , இவர்களையும் சுத்திகரித்தது. மொத்தத்தில் அறகல *fail..*

மக்கள் போராட்டம் ஒன்றை மழுங்கடித்ததுதான் இவர்களது வெற்றி....

*****

பரி யோவான்,
கினிகத் ஹென,
ஹட்டன்.

**கேள்வி :** தமிழர் பிரச்சனைக்கு தீர்வு கிட்டுமா...?



**பதில் :** அட நீங்க போங்க....

அப்படி ஒரு பிரச்சனையே இல்லை என்கிறார்கள். இல்லாத பிரச்சனைக்கு தீர்வை எப்படி கொடுப்பது...?

தமிழர் என்றால் கிள்ளுக்கீரை தான்..

நாட்டில் அரசியல் கைதிகளே இல்லை என்றார்கள். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக விடுகிறார்கள்.

இனப்பிரச்சனையும் இல்லை என்று சொன்னவங்கள், இப்போது தென்னாபிரிக்காவுக்கு போய் தீர்வைத் தேடுகிறார்களாம்...

*****

ஓட்டமாவடி சம்சுதீன்,
செங்கலடி கனகரத்தினம்

**கேள்வி :** வடக்கு, கிழக்கில் காலங் காலமாக இருக்கின்ற வீதிகளின் தமிழ் பெயர்களை சிங்கள பெயராக மாற்றுவதில் அதிகார வர்க்கம் மும்மூரமாக இருப்பது ஏன்...?







**பதில் :** நாய்வால் நிலையில் தான் அதிகார வர்க்கம் இருக்கிறது....

பித்து பிடித்து அலையும் மன நோயாளிகளை திருத்தவே முடியாது.

ஏறாவூரில் புன்னைகுடா வீதியின் பெயரை மாற்றப் போரார்களாம். இது பிந்திய செய்தி....

இவர்களது தற்காலிக திருப்தி, நாட்டை மறைக்கிறது.

*****

சிந்துஜன் நடராஜா
உப்போடை,
மட்டக்களப்பு

**கேள்வி :** டொலர் வந்து குவியும் என்றார்கள். இதனால் சகல பொருட்களின் விலைகளும் குறையும் என்றும் சொன னார்கள்... அப்படி ஒன்றும் நடந்ததாக இல்லையே.....?




**பதில் :** அவதிப்படாதீங்க..

கிடைச்ச காசு கடன் கட்டவும் காணாது.. ஏன் உங்களுக்கு காய்கறி நல்லா விலை குறைஞ்சு தானே இருக்கு.. வயிறார சாப்பிடுங்க. எல்லாம் படிப்படியா நடக்கும்

*****

**2015இல் இலங்கை தற்கொலை செய்யும் நாடுகளின் பட்டியலில் முதல் இடத்தில் இருந்தது**

# தற்கொலை

## கோழைகளின் ஆயுதம்



## ஆன்மாவுக்கு செய்யும் துரோகம் பாவம்



கோவிலூர் செல்வராஜன்

ஓர் உயிரினம் தனது உயிரை தானே மாய்த்துக் கொள்வது தற்கொலை என்று சொல்லப்படும். இது ஐந்தறிவு கொண்ட உயிரினங்களிடையே இல்லை. ஆறறிவு கொண்ட மனித இனத்தில்தான் இந்த தற்கொலை இன்று பரவலாக செய்யப்படுகிறது.

ஒருவர், சுட்டு கொலை செய்யப்பட்டார், வெட்டி அல்லது அடித்து கொலை செய்யப்பட்டார். அல்லது கபடத்தனமாக உணவிலோ, பாலிலோ விஷம் வைத்து கொலை செய்யப்பட்டார் என்றெல்லாம் கொலை செய்திகளை நாம் கேள்விப்படுவதுண்டு. இவை எல்லாம் கொலை. ஆனால் தனது உயிரை தானே அழித்து சாவதற்கு பெயர் தற்கொலை. இது காலம் காலமாக மனித குலத்தில் நடக்கும் ஒரு பாதக செயலாகும்.

காதல் தோல்வி , பரீட்சையில் தோல்வி, கடன் தொல்லை, வீட்டில் பிரச்சினை, மானபங்கம் அடைதல் என்று பல காரணங்கள் இந்த தற்கொலைக்கு சொல்லப்படுகின்றது. இதை விட அதீத குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, என்ன செய்கிறோம் என்று தங்களுக்கே தெரியாத நிலையில் வீம்புக்காக, வெறும் அடாவடித்தனத்துக்கு நஞ்சு குடிப்பது, தூக்கு போட்டு தொங்குவது, தன்னைத்தானே சுட்டுக் கொள்வது, நிறையவே தூக்க மாத்திரைகளை உட்கொண்டு இறந்துவிடுவது என்று பல வழிகளில் இந்த தற்கொலை செய்பவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

இவர்களை உண்மையில் சுத்தக் கோழைகள் என்றே உலகம் சொல்கிறது.

வாழத்தெரியாத, அல்லது வாழ்வதற்கு வழிதெரியாத, வழியைத் தேடாத வடிகட்டிய முட்டாள்கள் ான் இந்த தற்கொலையாளர்கள் என்றும் சமூகம் இவர்களை பழிக்கிறது.

தற்கொலைகளை நியாயப் படுத்துவதற்கு ஒருசிலர் முயன்றாலும் அது சட்டதிட்டங்களுக்கு ஒத்துவராது. அதற்கு அனுமதியும் இல்லை.

### இலங்கையில் தற்கொலைக்கு பிரதான காரணங்கள்

01. மன அழுத்தம் (Depression):- இது கடன் தொல்லை, காதல் தோல்வி என்று பட்டியல் நீண்டு செல்லும்.
02. மதுப்பழக்கத்துக்கு அடிமையாதல். இதனுடன் சேர்த்து ஏனைய போதைப்பொருள் பாவனையும் காரணங்களாகும்.
03. பெற்றோர் கண்காணிப்பு இன்மை மற்றும் தனிமை.

**இலங்கையில் தற்கொலை செய்வோரில் 80% ஆனவர்கள் ஆண்கள்**

நோய்வாய்பட்டு அதை குணப்படுத்த முடியாத நோயாளிக்கு கருணைக்கொலை செய்யவே சட்டம் இலகுவாக இடம் கொடுப்பதில்லை. காரணம் மனித உயிரின் சிறப்பும், மேன்மையும் அதன் முக்கியத்துவமுமே. ஆனால் இன்று பலர் தற்கொலை செய்துகொண்டு இறந்து விடுகிறார்கள். இவர்கள் உண்மையில் கோழைகளே. அதுவும் குடும்ப பந்தத்தில் இருந்து மனைவி, பிள்ளைகள் என்று பெற்றுக் கொண்டு அவர்களை நடுக்கடலில் விட்ட கணக்காக தற்கொலை செய்து சாகிறார்கள். இவர்கள் தங்கள் சாவுக்கு பின்பு தங்கள் குடும்பம் எப்படி தத்தளிக்கும் என்று சிறிதும் உணர்வதில்லை.


இவர்கள் உண்மையில் சுயநல வாதிகளே. இவர்கள் தங்களை மட்டும் நினைத்து, தங்களின் நலன்களில் கவனம் கொண்டு வாழ்ந்தவர்கள். அந்த சுகத்தை பேணமுடியாமல் அல்லது தங்கள் நலன்களை காக்க பொருளாதாரம் பற்றாக் குறையாக வரும் பொழுது மனமொடிந்து சாவை தழுவிக் கொள்கிறார்கள். அதிலும் குடிக்கு அடிமையானவர்கள் பற்றி சொல்லவே வேண்டாம். இவர்கள் பிறரை நம்பியே இருப்பார்கள். இவர்களுக்கு மனைவி பற்றியோ, பிள்ளைகள் பற்றியோ எந்தக் கவலையும் கிடையாது.

**‘குடி குடியை கெடுக்கும்’, ‘குடி உயிரைப் பறிக்கும்’** என்பதெல்லாம் இவர்களுக்கு பிடிக்காத சொல்லாடல்கள். உலகில் தற்கொலை செய்தவர்கள் அநேகர் குடிகாரர்களே.


ஒருவேளை நிறைய குடித்து தங்களை மறந்த நிலையில்தான் இவர்களுக்கு தற்கொலை செய்ய துணிவு வருமோ என்னவோ?

எது எப்படி இருந்தாலும் இந்த தற்கொலை என்பது ஒரு கோழைத்தனம் இதை சமூகமோ அல்லது சட்ட, திட்டங்களோ ஏற்றுக்கொள்வதில்லை என்பதைவிட, ஆத்மாவுக்கு செய்யும் துரோகம், பாவம் என்றும் தற்கொலை செய்ய முயல்வோர் எண்ணித் துணிய வேண்டும்.

*Sri Lanka Suicide Rate 2000 - 2023*





SRI LANKA SUICIDE RATE 2000-2023



# ஈழத்தின் கலைக்கோயில்

# திருமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்





அ . அச்சுதன்

ஈழநாட்டின் தலைசிறந்த புண்ணிய ஷேத்திரமாகிய பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தை திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய, கோணேஸ்வரப் பெருமானின் கிருபா கடாட்சம் அம்பாளுடைய ஆலயத்தில் நிறைந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்தில் நிற்கும் போது ஏற்படுகின்றது.

திருகோணமலை பட்டினத்தின் இதய ஸ்தானம் போல் அமைந்திருக்கின்றது இந்த முதன்மையான சக்தி பீடம். திருகோணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பேரூந்து நிலையத்திற்குச் சமீபத்தில் டொக்கியாட் வீதிக்கு அருகாமையில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்திற்கெதிரே பரந்த விளையாட்டு மைதானமும் அதையடுத்து விரிந்து பரந்து கிடக்கும் இந்து சமுத்திரமும் பத்திரகாளி அம்பாளுக்கு இயற்கையழகை ஊட்டிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாலயத்தின் வருடாந்த பிரமோற்சவம் 26.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு துவாஜாரோகணம் எனப்படும் கொடியேற்றத்துடன் தொடர்ந்து திருவிழா இடம்பெற்று 04.04.2023 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவமும் 05.04.2023 புதன்கிழமை உதயத்தில் அம்பாள் சிம்ம வாகனத்தில் எழுந்தருளி சமுத்திரக்கரையில் தீர்த்தோற்ஸவம் இடம்பெறும். ஆலயத்தின் பிரதமகுருவும் ஆதினகர்த்தாவுமான வேதாகமாமணி பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் தலைமையில் அம்பாளின் அருள் தரிசனத்துடன் திருவிழா சிறப்புற நடைபெறும்.

இக்கோயிலின் வரலாற்றை திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியவில்லை. என்றாலும் இக்கோயில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், பழைய சாசனங்கள், கர்ண பரம்பரையாக வழங்கி வரும் கதைகள், அம்பாளின் விக்கிரகம், தகளி, வாகனம், ஏனைய ஆலய பொருட்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ்வாலயத்தின் காலம் வரலாறு அற்புதங்கள் குறிப்பிடுகின்றது.

முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய பதினோராம் நூற்றாண்டில் இவ்வாலயம் மிகவும் சிறப்புற்று இருக்கவேண்டுமென்று சரித்திர பேராசிரியர் செ. குணசிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இதனால் இதற்கு முற்பட்ட காலத்திலிருந்து இக்கோயில் இருந்துள்ளது என்பதை உறுதியுடன் கூறமுடியும்.


தற்போது இவ்வாலயம் இருக்கும் இடத்தில் பன்னெடுங்காலத்திற்கு முன்பு நிலத்தை அகழ்ந்த போது ஒரு தகளி கிடைத்ததாகவும் அதற்குள்ளே அம்பாளின் திருவுருவம் இருந்ததாகவும் கூறுகின்றார்கள். அந்த அம்பாளின் திருவுருவம் இப்போதும் ஆலயத்திலிருக்கின்றது. சில விசேட உற்சவங்களுக்கு இந்த அம்பாளை எழுந்தருளச் செய்வார்கள்.

சிங்கவாகனம் ஒன்றை இந்தியாவிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொண்டு இந்து சமுத்திரத்தில் அக்கப்பல் சென்று கொண்டிருந்ததாகவும் பத்திரகாளி ஆலயத்திற்கு நேராக இக்கப்பல் ஓடாமல் நின்று விட்டதாகவும் அப்பிகையின் அருளால் கப்பல் தலைவன் கண்ட சொற்பனத்தின் படி அந்தச் சிங்க வாகனத்தை இவ்வாலயத்திற்கு சேர்த்த பின்னரே கப்பல் ஓடத் தொடங்கியதென்றும் கர்ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகின்றது. அந்த சிங்க வாகனமும் இன்றும் இவ்வாலயத்தில் இருக்கின்றது. இவ்வாலயத்தின் வரலாறு கூறும் கல்வெட்டும் இவ் ஆலயத்தில் காணப்படுகின்றது.

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாக கூறப்படும் உண்மை சம்பவம் ஒன்று கூறப்படுகின்றது. பத்திரகாளி அம்பாளின் சந்நிதானத்திற்கு முன்பாக ஒரு பெண் தலைவிரி கோலத்தோடு ஒருநாள் சென்றதாகவும் அதனால் அப்பெண்ணினுடைய தலை ஒரு பக்கமாக திரும்பி விட்டதாகவும் அம்பாளுக்கு அபசாரம் செய்து விட்டதாக அப்பெண் சொற்பனங்கண்டு குற்றத்தையுணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலை மயிர்களை கத்தரித்து நேர்த்திக் கடனாகக்கொடுத்த பின்பு தான் தலையை சரியான நிலைக்குத் திரும்பக்கூடியதாயிருந்ததாம். அந்தப் பெண்ணின் மயிர்களில் ஒரு பகுதி இன்றும் அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

இதே போன்று, பல அதிசயங்கள் இவ் ஆலயத்தில் நிகழ்ந்துள்ளது. பிரம்ம ஸ்ரீ சு.கு. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களின் காலத்தில் மேலும் இவ்ஆலய பல சிறப்புக்களுடன்வளர்ச்சியடைந்துள்ளது. 1972ஆம் ஆண்டு சித்திரத் தேர் மூன்றும் மஞ்சமும் செய்யப்பட்டு இரதோற்சவத்திற்குப் பயன்பட்டு வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இதுவாகும். 1981 ஆம் ஆண்டு இந்தத் தேர்களைப் பாதுகாப்பதற்காக தேராலயம் ஒன்று அமைக்கபட்டது.

சோமாஸ் கந்தக் குருக்களின் மகனாகிய பிரம்ம ஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள் காலத்தில் தான் இராஜகோபுரம் அமையப்பெற்றமையும் வரலாறு ஆகும். தற்போது இவ்வாலயம் இவருடைய நிர்வாகத்தின் கீழ் சிறப்பாக இயங்கி வருகின்றது. 18 சக்தி பிடங்களில் முதன்மையானதும் 51 சக்தி பீடங்களில் ஒன்றும் ஆகிய திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம் இன்று ஈழத்தின் கலைக் கோயிலாக காணப்படுகின்றது. ஆலயத்தின் வரலாறுகள் ஆலயத்தில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளமை இக்கோயிலின் வரலாற்றை கண்முன்னே எடுத்துக்காட்டுகின்றது.



வருடாந்த பிரமோற்ஸவத்துடன், வைகாசிப் பொங்கல், நவராத்திரி, கேதார கௌரி விரதம், இலட்சார்ச்சனை என்பனவும் இவ் ஆலயத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது





## உமா வரதராஜனின்

# ‘எல்லாமும் ஒன்றல்ல’

## நூல் வெளியீட்டு விழா

பிரபல எழுத்தாளர் உமா வரதராஜனின் ' 'எல்லாமும் ஒன்றல்ல' நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் ( 12.03.2023 ) கல்முனை மாநகரில் இடம் பெற்றது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாட சாலை நல்லதம்பி மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில், கொட்டும் மழைக்கு மத்தியிலும் பெருந்திரளான இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிப்பிக்கப்பட் டுள்ள இந்த நூலை, கல்முனை வியூகம் கலை இலக்கிய அமைப்பு வெளியிட்டது.

மேனாள் பேராசிரியர் செ.யோகராசா நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் புத்தகத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

மூத்த ஊட கவியலாளர் க. குணராசா முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், டொக்டர் திருமதி புஷ்பலதா லோகநாதன், கவிஞர் சோலைக்கிளி, மன்சூர் ஏ. காதர், சபா சபேசன், வாசுதேவன், சிவ -வரதராஜன், சஞ்சீவி சிவகுமார், பி. சஜிந்ரன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இந்த நிகழ்வில், கல்முனை உயர் நீதிமன்ற நீதிபதி ரோஸ்கியும் கலந்து சிறப்பித்தார்.





























# துறைநீலாவணையில் சரவணமுத்து ஞாபகார்த்த கூடைப்பந்து மைதானம்

## தந்தையின் நினைவாக தனயன் நவநீதனால் ரூ.75 இலட்சம் செலவில் நிர்மாணம்



தன் தந்தையின் நினைவாக திரு. ச. நவநீதன் துறைநீலாவணையில் அமைத்துள்ள அமரர் சரவணமுத்து ஞாபகார்த்த கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அண்மையில் (18.03.2023) திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் எழுத்தாளர் உமா வரதராஜன் தலைமை தாங்க பிரதம விருந்தினராக இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் க.மகேசன் அவர்களும் சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா அவர்களும் கலந்து சிறப்பிக்க மைதானம் திறந்து வைக்கப்பட்டது.

இவர்களுடன் சிறப்பு விருந்தினர்களாகவும், விசேஷ விருந்தினர்களாகவும் முக்கியஸ்தர்கள் பலரும் வருகை தந்து விழாவை சிறப்பித்தனர்.

சரவணமுத்து ஞாபகார்த்த கூடைபந்து 2023 போட்டி மிள்விளக்கு ஒளியில் இரவு நடைபெற்றது அதில் மட் புனித மிக்கேல் கல்லூரி கிண்ணத்தை சுவீகரித்தது .

இந்த கூடைப்பந்து விளையாட்டு மைதானத்தை சரவணமுத்து அவர்களின் மகன் நவநீதன் (செயலாளர் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு ) ரூபாய் 7500000 நிதியில் இந்த மைதானத்தை நிர்மாணித்து வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வை எழில்வண்ணன் தொகுத்து வழங்கினார்
















வெளியில் செல்லும் போது முகக் கவசம் அணிந்து செல்வோம்

கொடிய கொரானாவிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்

கல்முனை NET kalmunainet.com


Published by Kalmunainet Media Network (Pvt) Ltd. at Boundary Road, Kalmunai 01. on Friday, 31. 03. 2023